உ

சுந்தர விலாசம்

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

292, லிங்க செட்டி தெரு,

சென்னை.

(October 1931.)

கணபதி துணை

சுந்தர விலாசம்

ஸ்ரீ கருணீக குல திலக
அண்.ணிய பூபன்
இயற்றியது.

வ. சு. செங்கல்வராய பிள்ளை எம்.
பதிப்பித்தது.

1931

உ

கணபதி துணை

திருத்தணிகேசன் துணை

முகவுரை

'சுந்தர விலாசம்'—எனப் பெயரிய இந்நூல் ஸ்ரீசுந்தர மூர்த்தி சுவாமிகளின் சரித்திரத்தை நாடக ரூபமாகக் கூறுவது. சமயத்துக்கேற்ற செய்யுள் நடையும் பொருட் போக்கும் மிகப் பொருத்தமாக அமைந்து இந்நூல் படிப்பவர் மனத்தைக் கவரும் வனப்பினது. நாடக மேடையில் நடிக்கக், கட்புலனுக்குஞ் செவிப்புலனுக்கும் இனிமை தருவனவான காட்சிகளும் கீதவகையும் இந்நூலில் நிரம்பியுள்ளன என்பது இந்நூலைப் பார்ப்பவர்க்கு நன்கு தெரியும். இந்நூல் இதுவரையும் அச்சேறினதாகத் தெரியவில்லை. எனது தந்தையார் திருப்புகழ்ப் பதிப்பாசிரியர் வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் உபகாரச் சம்பளம் பெற்றுத் திருத்தணியில் இருந்தபொழுது (1904-ஆம் வருஷத்தில்) இந்நூலை ஓர் ஓலைப் புத்தகத்தினின்றும் காகிதத்திற் பெயர்த்தெழுதினார்கள். அந்த ஓலைப் புத்தகம் என்னாயிற்று என்பது தெரியவில்லை. அதை எமது தந்தையாருக்குக் கொடுத்துதவினவர் இன்னார் என்பதும் தெரிந்திலது; எனினும், எமது தந்தையார் காகிதத்தில் எழுதி வைத்திருந்த பிரதியின்படியே சிற்சில இடங்களில் திருத்த வேண்டுவனவற்றை மட்டும் திருத்தி இந்நூல் இப்போது அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூலை ஆக்கியோரைக் குறித்த விவரங்கள் ஒன்றும் நன்கு தெரியாததாலும், இந்நூலின் ஏட்டுப் பிரதி ஒன்றேனும் கிடையாமையாலும் நூலை அச்சிட இந்நாள் ஆயிற்று. இனியும் தாமதித்தால் இருக்கின்ற காகித நகலுக்கும் ஊறு வருமென அஞ்சிக் கூடியமட்டும் திருத்தமாக இந்நூல் அச்சிடப்பட்டது. அறியாமையால் நேர்ந்த பிழைகளை ஆன்றோர் பொறுத்து நூலைக் குறித்த விவரங்களேனும், நூலின் ஏட்டுப் பிரதியேனும் கிடைத்தால் எமக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

சென்னை }
15-9-1931. } வ. சு. செங்கல்வராய பிள்ளை.

குறிப்புரை

1. நூலாசிரியர் :—இந்நூலை யியற்றியவர் பெயர் "அண்ணியான்". இவர் தந்தையின் பெயரும் அதுவே. இவர் எமது 'சீர் கருணீக' குலத்தினர். இவர் சிறந்த குலாபிமானி என்பது சிவபிரான் கொணர்ந்த அடிமை ஓலைச் சீட்டைச் சபையினோர்க்குப் படிக்கக் கணக்கப்பிள்ளை வந்ததாகச் சொல்லும் வருணனையை மிக அழகாகவும், வேடிக்கையாகவும், சிறப்பாகவும் கூறின தன்மையால் நன்கு புலப்படுகின்றது.

2. நூலியற்றிய இடம் :—மாவை. இது இன்ன ஊர் என்பது விளங்கவில்லை. இவ்வூர் பாலாற்றுக்கு வடகரையில் உள்ளது என்பது மட்டுந்தான் தெரிகின்றது. இத்தலத்திற் சுவாமி பெயர் - சத்யவாசகர் ; தேவியார் - வாழவந்தாள்.

3. நூலை ஆக்குவித்தோர், நூல் வரலாறு :—நூலை ஆக்குவித்தோர் மாவை நகரில் அரசென இருந்த தம்பு பூபதி. இவர் சத்தி என்பவரின் புதல்வன். புலவர்க்கு உதவும் பெருவள்ளல். தம்பு பூபதி சுந்தரமூர்த்தி சுவாமியின் சரித்திரத்தில் மிக்க ஈடுபட்டவரா யிருந்திருத்தல் வேண்டும். 'சுந்தரமூர்த்திப் பெருமானது சரித்திரத்தைக் கேட்டு மகிழ்வது போதாது கண்டும் மகிழவேண்டும் என்னும் பேரவாக் கொண்டுள்ளேன். எனது இச்சையைப் பூர்த்தி செய்யவேண்டும்' எனத் தம்புபூபதி தம்மைக்கேட்டுக்கொள்ள இந்நூலைத் தாம் இயற்றியதாக நூலாசிரியர் பாயிரத்திற் கூறியுள்ளார்.

கந்தபிரான் திருவருளை துணையாகக்கொண்டு இந்நூலை இயற்றி யுள்ளதாகக் கூறியுள்ளதாலும், திருத்தணிகேசனைக் கடவுள் வாழ்த்திற் கூறியுள்ளதாலும், முருகக் கடவுளே இவருக்குக் குலதெய்வம் என்பது ஏற்படுகின்றது.

4. நூற் சிறப்பு:—நூல் நாடக நூலாதலின் பாத்திரங் களுக்கு ஏற்ற நடையும் சமயத்துக்குரிய செய்யுளமைப்பும் பொருந்தி யுள்ளன. நூலாசிரியர் சிறந்த தமிழ்ப்புலவர் என்பது அவருடைய வாக்கால் நன்கு தெரிகின்றது. இவருடைய புலமையை 43–ஆம் செய்யுளின் (3) (7)–(10) கண்ணிகளில் வரும் சிலேடைகளிலும், 44-ஆம் செய்யு ளிலுங் காணலாகும். பெரிய புராணத்திற் சுந்தரர் சரித்திரம் அமைந்துள அமைப்பையே பெரிதுந் தழுவிச், சேக்கிழார் சுவாமிகள் திருமொழியையும் பொன்னேபோல் ஆங்காங்குப் போற்றி எடுத்தாண்டுள்ளது இன்பம் பயக்கின்றது.

சுந்தரருக்கும் கிழப் பிராமணருக்கும் நடக்கும் விவாதம், சுந்தரர் - பரவை - சங்கிலி இவர்கள் விரகதாபம், கோழிப் போர், கடாப்போர், மல்யுத்தம், வேடுபறி இவைகளின் வர்ணனை மிக இனிமையாக அமைந்துள்ளன.

நூலை ஆக்கியோன், ஆக்குவித்தோன் — இவர்களது காலம் முதலிய பிற விவரங்கள் கிடையாமை வருத்தந் தருகின்றது.

நகைச்சுவை, வீரச்சுவை, பத்திச்சுவை, சோக ரசம் ஆதிய எல்லாம் பொருந்தி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனப்படும் முத்தமிழுக்கும் இலக்கணமாய் விளங்கு கின்ற இந்நூல் தமிழ் மக்களாற் பெரிதும் பாராட்டப்படும் என்பதில் ஐயமே இல்லை.

"அத்தாஎன் ஆருயிரே அம்பொன்மலை வல்லிபங்கா
அரனே என்று
வித்தாரம் புகன்றுருகிப் பழிச்சுநருக் கருள்புரியும்
விமலன் கேட்பப்
பித்தாஎன் றரும்பதிகம் ஓதுதிரு நாவலூர்ப்
பெருமான் தாளே
இத்தேகத் தியான்துதிக்க எத்துணைதே கங்கள்தவம்
இயன்ற வம்மா.
(மயூர சல புராணம்.)

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமியின் திருவடிகளே சரணம்.

உ

கணபதி துணை

திருத்தணிகேசன் துணை.

சுந்தர விலாசம்.

1.

வெண்பா.

கணபதி துதி.

காவை நகர் பாலக் கணபதியைப் போற்றி செய்து
மாவை நகர்ப் பிள்ளையரை வாழ்த்தியே—தேவர் தொழும்
தூய கந்த வேளருளால் சுந்தரவி லாசத்தை
நேயமுடன் சொல்வேன் நினைந்து.

2.

* திபதை (அகவல்)

[கடவுள் வணக்கம், அடியார் வணக்கம்]

மலர்தலை யுலகின் வளர் தொண்டை நாட்டின்
பலர்புகழ் தெய்வப் பாலிமா நதியின்
வடகரை சிறந்த மாவைமா நகரில்
தடவரைச் சிலைக்கைச் சத்யவா சகனார்
கயிலைமே லகன்று காசிவந் திருந்து
இயலதா யறங்கள்நா லெட்டும் புரிந்து
காஞ்சிமா நகரில் கருதிவந் திடுமுன்
வாஞ்சையா யுமையாள் வணங்கியே பாவி

---

* திபதை—இரண்டடிக் கண்ணி.

முந்துபூ சனைசெய் முதல்வனார் பரிவின்
சந்த்ரனார்ச் சனைசெய் சந்த்ரசே கரனார்
மலரடி வணங்கி, வாழவந் தவள்தன்
இலகுபூங் கமல இணையடி தொழுது,
விளங்குசக் கரத்தை வேய்ந்தொளி ரரியை
வளம்பெறப் பணிந்து மனதினால் நினைந்து
தந்திமா முகனைத் தணிகைவாழ் குகனைச்
சிந்தையால் தினமுந் தியானமே புரிந்து,
பிரசவார் தவளப் பெரியதா மரையில்
சரஸ்வதி தாளைச் சந்ததம் பாவிச்,
சுந்தரர் தம்பிரான் தோழரா ரூரர்
செந்தமிழ் பாடத் திருத்தொண்டத் தொகையிற்
சாற்றிய அடியார் சரணபங் கயத்தைப்
போற்றியே பணிந்து புகழ்ந்திடு வேனே.

3.

நாட்டை ராகம்.

சௌபாக்ய வதிகாந்த சதுர்வேத வேதாந்த
சர்வேச காலாந்தகா —ஜெய ஜெயா.

ஜெய சயில கோதண்ட ஜெயஞான மார்த்தாண்ட
ஜெய விமல காலகண்டா —ஜெய ஜெயா.

கங்கா ஜடாதார கந்தர்ப்ப சங்கார
காருண்ய கமல நேத்ரா —ஜெய ஜெயா.

சகலேச பரராஜ தலமாலை புரிவாச
சந்த்ரசே கரவி லாசா —ஜெய ஜெயா.

4.

திபதை (அகவல்)

[பாயிரம்.]

* கங்கையும் பணியுங் கடுக்கையுந் தரித்த
திங்கள்வே ணியனார் திருவருள் கொண்டு
வெள்ளிமால் வரையை விடுத்தினி தகன்று
தெள்ளுசீர் புவியில் ஜென்மிக்க வேண்டி
தெக்கண மதனில் திருப்பெண்ணைக் கரையில்
முக்கிய மான முனைப்பாடி நாட்டில்
திசையெலாம் புகழுந் திருநாவ லூரில்
இசை ஞானி வயிற்றில் இனிதுடன் பிறந்து
சைவனார் தந்தை சடையனார் மகிழத்
தெய்வ வான் பிறைபோல் தினந்தினம் வளர்ந்து
பதினாறு வயது பாலக னாகி
அதிரூப மாகி ஆரூர ரென்ன
மணம் வந்த புத்தூர் மலர்க்கா வனத்தில்
இணைந்த பொற் பீடத் திருந்திடும் போதில்
அலகிலா வொளியார் அந்தண ராகி
மலரடி நோவ வந்துமுன் தோன்றி
என்னுடை அடிமை எனக்குநீ தொழும்பன்
முன்னமே யென்ன முனிவுடன் பேசி
சாதன முறியுந் தன்கையிற் கொண்டு ;
வாதுகள் பேசி மடிபிடித் திழுத்து
வித்தையீ தெனவே வெண்ணெய் நல் லூரில்
அந்தணர் சபையில் அடிச்சுபட் டோடி ;
வழக்கினிற் செயித்து வலிய ஆட்கொண்டு

*" கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த"— பெரியபுராணம்—தடுத்தாட்—(க).

தழைக்கவே புரிந்த சரித்திர முழுதும்
கமலினி அநிந்திதைக் கன்னிமா ரென்னும்
சமர்விழிப் பரவை சங்கிலி தம்மைச்
செய்ய ஆரூரில் திருவொற்றி யூரில்
வையகம் புகழ மணம்புணர்ந் ததுவும்
அங்கவர் தமக்கா அர்த்தரா த்திரியில்
துங்கமுக் கண்ணூர் தூதுசென் றதுவும்
மற்றுள வெவையும் மலையாள வழியில்
பற்றிவே டுவர்கள் பறித்தது முதலாய்க்
கவித்தமிழ்ப் புராணக் கதைசுதா ரசத்தைச்
செவிப்புல நிறைத்துத் தெவிட்டிடா தென்ன
இகமெலா மகிழ்ந்து இதயமே களிக்க
சகஜமாய் விழியில் தான்பார்க்க வேண்டி
மாபால வள்ளல் மாவையூர்க் கரசன்
தாபாலர் போற்றுஞ் சத்திதன் புதல்வன்
அம்புவிப் புலவோர்க் கைந்தரு வாகும்
தம்பூ பதிதான் சாற்றெனச் சொல்ல
வெண்ணிசேர் பதாகை விளங்குசீர்க் கருணன்
அண்ணியா னுதவும் அண்ணிய பூபன்
சுந்தர விலாச சுபலநா டகத்தைக்
கந்தவே ளருளின் கழறிய வதனை
அவசரித் திரமா யறிந்துகொள் ளாமல்
சிவசரித் திரமாய்ச் செப்பிய வதனால்
புன்சொ லாயிடி னும் புலவர்க ளானோர்
இன்சொலாய் மனதி லிசைந்துகொள் வாரே.

பாயிரம் முற்றும்.

வசனம்.

சகல ஜீவாதார மாயிருக்கப்பட்ட தம்பிரான் தோழராகிய சுந்தரர் விலாசத்தை எம்மாலான மாத்திரம் நடிக்கின்றோம். எங்கள் தப்புப் பொறுத்துச் சகல ஜனங்களும் பாருங்கோள்!

I. புத்தூரில் திருமணச் சடங்கு.

[மாப்பிள்ளைத் தோழர் வருதல்]

5.

விருத்தம்.

பூப்பிள்ளை மதியந் தன்னைப் புரிசடை மீது சூடிச்
சேப்பிள மடமான் தன்னைச் செங்கையிற் றரித்தார் தோழர்
கோப்பிள்ளை சைவ வேதக் குரிசில்சுந் தரர்கல் யாண
மாப்பிள்ளைத் தோழன் விப்ர வக்கிரன் வருகின் றானே.

6.

* தரு.

(1) சுள்ளிப் போலக் காலுங் கையும்
தொள்ளைக் காதுஞ் சுடிச்ச முகமும்
வெள்ளிக் கண்ணும் அழகான
விப்ர வக்ரன் வந்தான் ஐயா!

(2) சொந்த மாயோர் கையிற் கோலும்
சுந்த ரனுர் தோழ னென்ன
விந்தையா யொய் யாரமான
விப்ர வக்ரன் வந்தான் ஐயா!

(3) தைச்ச கந்தை குல்லா யிட்டுச்
சட்டை தொட்டுக் கண்டோ ரெல்லாம்
மெச்ச மெச்ச சொகு சான
விப்ர வக்ரன் வந்தான் ஐயா!

* தரு—ஒருவகை இசைப்பாட்டு.

(4) வாடிக்கையாய் நீறுபூசி
மார்பில் பூண நூலும் போட்டு
வேடிக்கையா யந்த கார
விப்ர வக்ஷன் வந்தான் ஐயா !

வசனம்.

[வினு :]—வாரும் பிள்ளாய் பிராமணு ! நீ எங்கிருந்து வருகிருய் சொல்லும் பிள்ளாய் !

[விடை :]—ஆனுல் திருநாவலூரிலே இருந்து சுந்தரர் மணம் வருகிருர். நான் மாப்பிள்ளைத் தோழன். இந்த வார்த்தை முன்னே சொல்ல வந்தேன் பிள்ளாய் !

[மாப்பிள்ளை சுந்தரர் வருதல்]

7.

தியதை

காட்கொண்ட கண்டன் முந்திக் கனிவினுல் வலிய வந்தே
ஆட்கொண்டே யாள வல்ல ஆண்டவ ஞகி நின்று
தூதனுய்த் தோழ ஞகிச் சொலுந்தமிழ்ப் பாடற் கெல்லாம்
மாதனம் அளிக்க வல்ல வள்ளலு மாகி நிற்க
மாதவம் புரிந்து முன்னே வன்ருெண்ட னென்று நாமம்
பூதலம் அறிய முக்கட் புரவலன் சொலும் ஆரூரர்
படங்கவிப் பணிப்பூ ணுரப் பரமனு ரருளி னுலே
சடங்கவிச் சைவன் பெற்ற தையலை மணந்து கொள்ள
தந்திரு வளமுங் கொண்டு தம்மை முன் வளர்த்த வீறு
நந்திடா வரசு கொண்ட நரசிங்க முனையார் தந்த
செல்வமும் கொண்டு ரத்ந செம்பொனு பரணம் பூண்டு
வல்லமை யாகி நல்ல மணப்பிள்ளைக் கோல மாகித்
தளம் பெறு சுற்றஞ் சூழத் தாண்டுபொற் பரியி லேறி
வளம்பெறு புத்தூ ருக்கு மகிழ்வுடன் வருகின் ருரே.

8.

தரு.

(1) தவள முத்துக் குல்லா யிட்டுத்
தாளி பில்லை பதக்கம் பூண்டு ;
* துவள முந்நூல் †சைவ யோகத்
துரக மேல்வந் தனர் பாரீர்.

(2) பொன்னி னுடை தன்னைப் போற்று
பூஷண மெல் லாம ணிந்து
மன்னர் மன்னர் புகழ சைவ ;
வளமை யாய்வந் தனர் பாரீர்.

(3) இருபுறமுங் கவரி வீச
எழுகடல் போல் மேளம் பொங்க
சுருபமத ராஜ னென்ன
சொகுசுடன் வந்தனர் பாரீர்.

(4) சடங்கவியார் முதலா யுள்ள
சம்பந்திமா ரெதிர் கொள்ள
தொடங்கியே யாரூர னென்னுஞ்
சுந்தரர் வந் தனர் பாரீர்.

வசனம்.

வாரும்! பிள்ளாய்! விப்ரவக்ரா! சடங்கவியார் வீட்டுக்குப் போய் பந்தல் பரப்பு முதலா யுள்ளதும் முஸ்தாச்சுதோ விசாரித்து வாரும் பிள்ளாய்!

அப்படியே விசாரித்து வந்து சொல்லுகிறேன், ஐயா, சகலமும் முஸ்தாச்சுது. இனி முகூர்த்தவேளை யாச்சுது, சீக்கிரமாய் கோலம் வர வேணும், ஐயா.

---

* 'நூலசைந் திலங்கு மார்பு,' — 'முந்நூல் மின்ன'; தடுத்தாட்—(கச), (கஎ.)

† 'யோகப் புரவி மேற் கொண்டு போந்தார்'—ஷெ (கக.)

9.

தாடிப்பதம்.

கோலம் பாரீர் சுந்தரர் கோலம் பாரீர் :

(1) *கோலம் பாரீர் சிங்கார மாகிய*
குமரவேளென மதன வேளென
சாலவேயழ கொழுக வாம்பரி
தன்னிலே தெரு வீதிவருகிற—கோலம் பாரீர்;

(2) *பேரிகாகளத் தூரியத் தொனி*
பெரிய வானிடி போல் முழங்கிட
சாரியாகிசன் னுகமாகி.
சமேளமாய்த் தெரு வீதிவருகிற—கோலம் பாரீர் ;

(3) *வந்து மாகதர் புகழ சங்கித*
மங்களத் தொனி பொங்க இங்கித
மந்தமா ருதம் வீச நாட்டிய
மாதர் சூழ்ந்திட வீதிவருகிற—கோலம் பாரீர்;

(4) *மன்னர் போற்றிய நாவ லூர்வரு*
வள்ளல் கோலம் வந்தார் வந்தாரெனச்
சின்ன மூதிடச் சைவ வேதியர்
திரண்டு சூழ்ந்திட வீதி வருகிற-கோலம் பாரீர்.

10.

விருத்தம்

*கோலம்வந் தினிய *யோகக் குதிரைவிட் டிழிந்து மாதர்*
சால மங் களங்கள் பாடித் தனித்தனித் தீப மேந்திச்
சீலமாய் மாம னார்தந் திருமுற்றம் புகுந்தா ரூரர்
மாலிவ னென்னப் பொன்னின் மணை மிசை யிருக்கின் றாரே.

---

* 'யோகக் குதிரை'—செய்யுள் 8 (1) கீழ்க்குறிப்பைக் காண்க

வசனம்

அந்த சமையத்திலே புரோகிதர் வருகிற விதம் எப்படி யென்றால் :—

புரோகிதர் வருகை.

11

விருத்தம்

** நன்னிய சதிரங் கெத்தாய் நோக்கு பஞ் சாங்கத் தோடு*
துன்னிவா சிக்க வல்ல சுருதியா றங்கஞ் சொல்லி
மன்னிய சத்தாங் கத்தை வழங்கவே வாங்க வல்லோர் ;
பன்னுசீர் புரோகிதர் பூப் பந்தலில் வருகின்றாரே.

12

தரு.

வந்தனர் வந்தனரே—புரோகிதர்—வந்தனர் வந்தனரே.

(1) *வந்தனர் கெந்தம் அணிந்தனர் சிந்தையு*
கந்தனர் அக்ஷதை தந்தன ரிங்கே (வந்தனர்)

(2) *சால முந் நூலினரே—வேத ஞான*
சீல நன் னூலினரே
குந்திய காலினர் கையொரு கோலினர்
பிரமனைப் போலின ரிங்கே (வந்தனர்)

13

விருத்தம்

அஷ்டஐஸ் வர்ய மஸ்து; ஆயுள் ஆரோக்ய மஸ்து ;
இஷ்டகாம் யார்த்த மஸ்து ! ஈஸ்வர கடாக்ஷ மஸ்து;
துஷ்ட நிக் கிரக மஸ்து; சுபமஸ்து; அவிக்ந மஸ்து;
சிஷ்ட ரக்ஷதயு மஸ்து; சிந்தூ பலித மஸ்து.

---

* இச் செய்யுளில் 4-முதல் 7 வரையும் வருகிற சொல்லழகைக் காண்க.

வசனம்

அகோ! புரோகிதரே! நமஸ்காரம், இரும் ஐயா.

14.

விருத்தம்

கெந்தமக்ஷதையும் நாளி கேரமும் பழமுங் கொண்டு
தந்திடும்; அரிசி புஷ்பம் தாம்பூலங் கொண்டு வாரும்
செந்தழல் வளர்க்க நெய்யும் தெக்ஷணை பணமுந் தாரும்
அந்த நீர்க் காகம் வைத்தே ஆச்சனை செய்கு வீரே.

15.

சம்பை.

பாலிகையில் முளைதெளித்துப் பரதேசம் போய்வந்து
சாலவே யாசினைப்ர தக்ஷிணமும் வந்து
செந்தழலை வளர்த்தோமஞ் செய்துதிற மாய்வேத
மந்த்ரமொடு பொற்காப்பு வலக்கையில் தரித்து
சீலமொடு சடங்கனைத்துஞ் செய்தார்க ளாச்சுதினி
தாலிகட்ட வேமுகூர்த்தஞ் சமயமிது தானே.

வசனம்

இப்படியாகச் சடங்கெல்லாம் முடித்து இனி முகூர்த்த வேளை யாச்சு தென்று புரோகிதர் சொல்லுகிற சமையத்திலே பரமேஸ்வரர் பிராமண ரூபமாக வருகிற விதம் எப்படி யென்றால்:—

16.

திபதை (அகவல்)

தெள்ளுசீர் முனிவர் தேவர்கள் புகழ
வெள்ளியங் கயிலை வெற்பினை விடுத்து
சந்த்ரசேக ரனார் தம்முடை அடிமை
சுந்தரர் தமையேயார் தொல்முறைப் படியே
அமையவே வலிய ஆட்கொளப் புவியில்

சமையமீ தெனவே தாமெழுந் தருளிச்
செய்ய பக்ஷிகளைத் தீபங்கள் காட்டி
வையமேற் பிடிக்கும் வகையது போல
வந்து மாநுடன் ஃபால் வடிவது கொள்ள ;
சிந்தையே புரிந்து திருவருள் தழைத்துக்
கங்கையும் பணியுங் கடுக்கைகொக் கிறகும்
திங்கள் வான் பிறையும் செஞ்சடா டவியும்
எங்கனே குடிபோ யிருந்ததோ ? தலையில்
பங்கமாய் நரைத்த பதித்த பூஞ் சிகையும்
ஒற்றைநேத் திரத்தை யொளிக்கினு மதனுள்
மற்று நீள் நெருப்பை மறைத்த தெவ் வகையோ ?
தெரிகிலோம் * நுதலில் திருநீ றணிந்து
அரியதாகிய கெந் தக்ஷதை புனைந்து
கந்தர மதனிற் கறுப்பினை மறைத்து
சந்தன சுகந்தம் தன்னையே தரித்து
மன்னுபூங் கொன்றை மாலைமார் பகத்தில்
முன்னமே விளங்கும் முப்புரி நூலும்
பச்சைமா நிறமும் பாதியிற் சிவப்பும் .
இச்சையாய் விடுத்தே யேகமோர் நிறமாய்
மருவுமான் மழுவும் மற்றது மறைத்து
† ஒருகையிற் குடையும் ‡ ஒருகையிற் கோலும்
ஆகியே கரித்தோல் ஆடையை யொளித்து
ஏகநூல் கலையை யியல்பிறு லுடுத்து
குஞ்சித பதமும் கூத தாளும்
செஞ்ச வேஷமுமாய்த் திக்கென நடந்து

(1) * 'நுதற் புநித நீறு பொலி வெய்த'—தடுத்தாட் (உக)
(2) † 'ஆதப மறைக்குடை யணிக்கரம் விளங்க' ஷெ (௩௦)
(3) ‡ 'தண்டொரு கை கொண்டு ஷெ (௩௪)

கருணை கூர்ந் தொழுகுங் கதிர்மதி விழிகள்
அருண தாமரைபோல் அலர்ந்தழ கொழுக
தேவியு மறையச் செய்துதான் தனித்து
மேவியே முதிய விப்ரர்வந் தனரே.

17.

தரு.

[சிவபிரான் கிழ பிராமணராக வருதல்.]

கிழவிப்ரா ரிதோ வந்தனர்—எங்கள்
கிழ விப்ரா ரிதோ வந்தனர்.

(1) கிழ விப்ரா ர் மதி
குழவிப்ர மாணமாய்
கெந்தாக்ஷதை யிட்ட
திருநெற்றி தோன்ற—[கிழ விப்ரனுர்]

(2) திரிபுரம் எரியாத நகைதர—அந்த
* ஜெயவீரன் பிறவாத வெயர்வர
பரிபுர தாளினில் பரதநாட் டியம்விட்டு
பாரில் மெள்ள மெள்ள பதியவே நடந்து
—[கிழ விப்ரனுர்]

(3) வெண்ணீறு பூசிய தென்னவே—தலை
மேலெங்கும் நரைமயிர் மின்னவே
கண்ணுன மூன்றினில் தீச்சொரி—கண்ணைக்
கரந்திரு கண்ணிற் கருணையே சொரிய
—[கிழ விப்ரனுர்]

(4) குஞ்சரத் தோலுரி போலவே—அரைக்
கோவணஞ் சோமனுஞ் சாலவே
கஞ்சன் தலையையும் விட்டெறிந் தாரெனக்
கையினிற் கோலுங் குடையுமே கொண்டு
—[கிழ விப்ரனுர்]

* ஜெயவீரன்=வீரபத்திரர்.

18.

விருத்தம்.

இந்தவூர் புத்தூ ராமே எமக்கொரு தொண்ட னுகுஞ்
சுந்தரர் மணஞ்செய் வீடு தூரமோ கிட்ட வோதான்?
அந்தமே எத்தி னைசை அவன்கலி யாணந் தானே?
நந்தமக் கறிய நீங்கள் நவிலுவீர் நவிலு வீரே.

வசனம்.

வாருமையா! விருத்தப் பிராமணரே! சுந்தரர் மணஞ் செய்கிற வீடு இந்த வீடு தான், ஐயா! என்று சொல்லப், பந்தலிலே போன பிறகு அங்கே யிருக்கிறபேர் சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

19.

விருத்தம்.

நாதரே பெரியோர் வந்தீர் நமஸ்காரம் ஐயா நாங்கள்
மாதவஞ் செய்த தெல்லாம் வந்தின்று பலித மாச்சு
மேதகு திருவா ரூரன் விவாகமும் ப்ரபல மாச்சு
தேதையா நிற்கு கின்றீர் இருமையா இருமை யாவே.

வசனம்.

அந்த சமையத்தில் விருத்தப் பிராமணர் சொல்லுகிற விதம் எப்படி என்றால் :—

20.

தரு.

சைவ வேதியர் நீங்கள் சுந்தரர்
தமரு மானவ ரிங்ஙு னேயிவன்
செய்வதேதுகல் யாணம்நாமினி செப்பக்கேளும்
தந்தை தந்தையா ரூர னேமுதல்
தாரந்தாத்திலும் பிறந்த பிள்ளைகள்
முந்தவேயெமக் கடிமையாகிய முறியைக்கண்டீர்.

அந்தகாவினி லெழுத்து சாதனம்
அணைத்து மென்வச மாயிருக்கவே
இந்தவேரர் பையல் பாருமமதைகொண்
டிருக்கலானான்.

21.

தரு. (வேறு)

1. இவனுவதேது மணை ஏறுகின்ற தேது ?
அவமாகி யென்னை யறியாமல் வந்த தேது ?

2. வாழைமரங் கமுகமாம் வாசல்நட்ட தேது ?
ஆழியென மேளவகை ஆர்ப்பரிப்ப தேது ?

3. பந்தல்தனில் முளைதெளித்துப் பாலிகைக ளேது ?
சந்தடிகள் ஏதோமத் தழல்வளர்ப்ப தேது ?

4. சால்காகமேது அரசாணி யம்மி ஏது ?
மேல்வருவ தறியாத விப்ரரெல்லாம் ஏது ?

5. சடங்கவியார் பெற்றபெண்ணைத் தருவதுதா னேது ?
அடங்கலுமே யிவனடிமை யாருமறி யாரோ ?

6. ஆரூரா எழுந்திருடா அமையுமினி வாடா
நோகிச் சற்றுமிங்கே நில்லாமல் தானே.

வசனம்.

இப்படியாக விருத்தர் சொன்னது கேட்டுச் சுந்தரர் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :

22.

சம்பை..

(1) ஐயனே மெத்தமெத்த ஆகார்த்திய மாகவே
வையமேல் வழங்காத வசனமே சொல்லுறாய் !

(2) நித்திரையில் கனவுகண்டு நினைவுகொண்டு வந்ததோ
*பித்தனோ பொல்லாத பேய்பிடித் ததுவோ !

(3) விகடமாய்ப் பேசுவிப்ர வேஷமாய் வந்ததோ
அகடுபல பேசகூத் தாடியோ சொல்லாய் !

(4) அல்லவெனில் †அந்தணர்கள் ஆரும் ஒருவருக்கொருவர்
நல்லபடி யடிமைகொள்ளல் நாட்டிலே யுண்டோ ?

(5) ஆனாலும் என்பாட்டன் ஆரூரன் தானுமக்கு
மேனாளில் ஏதுக்கா விலைப்பட்டான் சொல்லாய் !

(6) விலைப்படினும் இதுவரைக்கும் மேவியெமைத் தொடாமல்
தலைப்பட்ட நீசும்மா தானிருந்த தென்னே ?

(7) என்னநீ சொல்லுகினும் எவர்க்குச்சம் மதியாகும்
கன்னகா ரத்தனமும் களவுமிங்கு செலுமோ ?

(8) செல்லாது விட்டோடும் சிறுக்குப்பண் ணாவின்னம்
பொல்லாத நானினிப் பொறுப்பதில்லை கண்டாய் !

(9) இன்னேரங் கிழவனென வேபொறுத்த தறிந்துகொண்டு
உன்னூரைத் தேடியினி ஓடுவாய் நீயே.

23.

‡ஏசல் தரு.

(1) கிழவர் :

நீ என்னடா சுந்தரா உன்றன் பாட்டன்
நிஜஎழுத் திருக்கையிலே—உன்றன்
§ காயகப் பேச்சென்னடா—கையிற் புண்ணுக்குக்
கண்ணாடி வேணுமோடா ?

* 'பித்தனுமாகப் பின்னும் பேயனுமாக'-(தடுத்தாட்-சக)

† 'அந்தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை யாதல் - பேச இன்றன்னைக் கேட்டோம்'—(ஷை சo)

‡ இச் செய்யுளில் அந்தாதித் தொடை நோக்குக.

§ காயகம் = மருட்டு வித்தை.

(2) சுந்தரர் :

வேண்டிற்றெல்லாஞ் சொல்லுருய்—உன்றன் வார்த்தை
மெய்ப்படு மோகிழவா ?
சில்வித் தோண்டிக்குள் ஆயிரஞ் சாலொடு
தண்ணீரைச் சொரிந்தாலு மேநிற்குமோ ?

(3) கிழவர் :

நில்லாத மொழியல்லடா—சொல்வ தெல்லாம்
நிஜ வார்த்தைகாண் சுந்தரா—ஒன்றுங்
கல்லாத மூடனைப் போலப் பேசிநீ—கோணக்
கழிவெட்டு கின்றாயடா—என்னடா !

(4) சுந்தரர் :

என்னடா நீ கிழவா அடிக்கடி எனக்குநீ
யடிமை என்றே என்றன்
முன்னிலேயே சொல்லுருய்—சொன்ன
வாய்க்கினி முத்திரை போடவேண்டா.

(5) கிழவர் :

முத்திரை போடுவையோ ? சுந்தரா !—இந்த
மொழி பதனம் பண்ணடா ! இனி
பத்தமே துலகினில் வளர்த்த கடாவந்து
பாயலாச்சு தல்லடா ?

(6) சுந்தரர் :

அல்லடா போ கிழவா !—இதனாலே
ஆவதுண்டோ சொல்லடா ?—இனி
நில்லடா வெளியே பிடித்துக் களியாட்டம்
நீ செய்ய வந்தாயடா.

(7) கிழவர் :

வந்தது நான் மெய்யடா—அல்லவென்று
வந்தக்கால் விடுவேனோடா—இனி
சுந்தரா பேச்சினால் பந்தலிட வேண்டாம்
சும்மா என்பிறகே வாடா.

(8) சுந்தரர் :

வாடா போடா என்கிருய்—இந்தப் பேச்சை
மன்னித்தேன் காண் கிழவா—இனிக்
கூடாது கொக்கு பிடிக்கின்ற மந்திரம்
கூறினு லேதா மடா.

24

விருத்தம்

கிழவர் :

மந்திர மல்ல வஞ்ச மாயமீ தல்ல வேறே
தந்திர மல்ல இந்த சாதனம் பார்த்துக் கோடா
புந்தியி லிகித சாக்ஷி புத்தியும் பார்த்துக் கோடா
சுந்தரா மணையை விட்டுத் தொடர்ந்துநீ வருகுவாயே.

25

விருத்தம்

சுந்தரர் :

வருகுவாய் என்று சொன்ன வசனம் மன்னித்தேன் கண்டாய்
பெரியதோர் கிழவா பித்தா பிதற்றிக்கொண் டினித்தான் [இங்கே
அருகுற நின்று யாகில் அப்புறம் என்ன வாமோ
ஒருகணம் இனிநில் லாதே யோடிநீ போகு வாயே.

வசனம்

அந்த சமயத்திலே கிழ விப்பிரனுர் மனதிலே வஞ்ச மில்லாமல் கோபாவேசம் லாப் பண்ணிக்கொண்டு, குடையையும் கோலையும் தரையிலே போட்டு, உத்தரீய வேஷ்டியை அரையிலே விருஞ்சுக் கட்டிக்கொண்டு, குடுமியை உதறி முடிஞ்சுகொண்டு, கண்கள் சிவக்க, வாய்நீர் தெறிக்க, உடம்பெல்லாந் துடிக்க, கைகால் நடுக்க நடந்து, புரோகிதர் மேலே விழுந்து, ஓமாக்கினியை மொச்சுக்கொண்டு, ஒரு கையிலே சாதன முறியைப் பிடித்துக் கொண்டு ஒரு கையினுலே மடி பிடித்திழுக்கிறபோது, சுந்தரரும்

2

கோபாவேசத்தராய் எழுந்திருந்து மேலே விழுந்து அடிச்சுப்பட்டு சாதனமுறியைப் பிடுங்கிக் கிழித்துப் போடுகிறபோது, கிழ விப்பிரனர் மடி பிடித்த கைவிடாமல் கூச்சலிடுகிற விதம் எப்படி யென்றால் :—

26

தரு.

(1) ஐய என்றன் அடிமைப் பையல் என்னே
அடித்தென்னைத் தள்ளுகிறான் கூகூ—இந்த
வையமேல் கேள்விமுறை கேட்டுத் தண்டிக்கும்
மன்னவ ரில்லேயோ கூகூ.

(2) பிடித்தான் இழுத்தான் அடித்தான் முறியைப்
பிடுங்கிக் கிழித்தான் காண் கூகூ—என்னை
அடித்தாலும் போகட்டும் முறியைக் கிழித்ததே
அநியாயம் அநியாயம் கூகூ.

(3) பித்தனுமே என்றான் பேசாதும் பேசினன்
பின்னையு மிப்படி செய்தான் கூகூ—இனி
எத்தனை யானாலும் இவனுடன் போராட்டம்
எனதாகு மாகுமோ கூகூ.

(4) அதிர அடித்தான் முறியைக் கிழித்தான்
ஆகட்டும் ஆகட்டும் கூகூ—அதுக்
கெதிரிடை போனாலும் எனக்கென்ன முதல்முறி
இருக்குதுகாண் இன்னம் கூகூ.

(5) பித்தனானாலும் இனித்தான் மடியைப்
பிடித்தகை விடுவேனோ கூகூ—இனி
இத்தல மீதினி லேவாட்டம் வந்தாலும்
இவனை விடுவேனோ கூகூ.

வசனம்

அந்த சமயத்திலே அங்கே இருக்கிற பேரெல்லாங் கூடி அவர்கள் சண்டையை விலக்கித் திருவெண்ணெய் நல்லூருக்கு வழக்குக்கு அனுப்புகிற விதம் எப்படி என்றால் :

27

ஓட தரு.

(1) ஏது நீங்கள் பெரியவர்கள் இப்படியும் செய்வீர்களோ
போதுமினி முனிவகன்று போர்புரிதல் விடுங்கள் ஐயா ;

(2) அடிமையென இவர்வந்தார் அல்லவென்று நீர்சொன்னீர்
நடுவிலையோ இதை அறிந்து நவில்நீதி பாரிலையோ ?

(3) வார்த்தை சொல்ல வாயிருக்க மதித்தறிய மனமிருக்க
தூர்த்தரென வேயிருந்து துஷ்டத்தனஞ் செய்வர்களோ?

(4) இடையிலொரு மனிதன்வந்து இல்லாத பொய்பேசி
உடைதுகிலைத் தன்னதென்றால் உத்தரிக்க வேண்டாமோ?

(5) ஆதலினால் அடிச்சபடல் அறமல்ல அறமல்ல
வாது செய்து பேசுவதும் வழக்கல்ல வழக்கல்ல ;

(6) இனி நாங்கள் சொன்னபடி இருவீருங் கேளுங்கோள்
மனுநீதிப் படியிதனை வழக்குரைக்க வல்லவர்கள்

(7) வெண்ணெய்நல்லூ ரந்தணர்கள் வேதசாஸ்த்ர சம்பன்னர்
நிர்ணயமாய்த் தீர்த்திடுவார் நீங்களங்கே போவீர்களே.

வசனம்

அந்தப்படி இருவரும் சம்மதியுடனே திருவெண்ணெய் நல்லூருக்குப் போகிற விதம் எப்படி யென்றால் :—

28

விருத்தம்.

சுந்தரர் நடந்து முன்னே துரீலெனப் போகப் பின்னே
வந்தமே தார் கிழவ னாரும் வளைந்து கொண் டோடச் சைவ
அந்தணர் சிலர்பின் செல்ல அதிகவே கத்தி னோடே
சந்திடா வெண்ணெய் நல்லூர் நகர்தனி லெய்தி னாரே.

வசனம்

அந்த சமயத்திலே யிவர்கள் வழக்குக்கு வந்த விசேஷங் கேட்டு திருவெண்ணெய்நல்லூர் அசேஷ வித்வ மஹா ஜனங்கள் பேர் பேராய் வருகிற விதம் எப்படி யென்றால் :

29

திபதை

அப்பைய ரனந்தய்யர் ஆனந்த தீக்ஷிதர்
குப்பையர் குருநாதர் குமரைய சாஸ்திரி
கெந்தர்வர் கீர்வாணர் கிருஷ்ணவ தானி
சந்த்ரசே கரர்சைவ சாமவேதப் பையர்
திரிவேத விசுவேசர் ஜெகந்நாத சாஸ்திரி
அறிவாயி ரம்பெற்ற ஆன்றோர்க ளிவர்கள்
கமலமா வதனமும் காஷாய வேஷ்டியும்
விமலமுந் நூலும் மேனிப்ர காசமும்
மகாகுண் டலமின்ன மணியாழி யொளிர
சகலரு மகிழ்வுடன் சபைக்குவந் தனரே.

30

தரு.

வந்தனர் சிங்கார மாக வந்தனர் பாரீர்!
அந்தணர்கள் வெண்ணெய் நல்லூர்
அசேஷ வித்வ மஹா ஜனங்கள் (வந்தனர்)
முப்புரி நூல் தன்னைக் கையால்
முடிதிருத்தித் திருத்திக் கொண்டு
அப்படியே பூஞ்சிகையை
யவிழ்த் ததறி முடிந்து கொள்வார் (வந்தனர்)

உத்தரிய வேஷ்டி தன்னை
　　உதறி மேலே போட்டுக் கொள்வார்
கைத்தலத்தால் கண்கள் தன்னைக்
　　காயந்தன்னை நீவிக் கொள்வார் (வந்தனர்)
ஒருவரொரு சுலோகஞ் சொல்ல
　　ஒருவரதற் குரைசொல்ல
ஒருவரதற் காமென்ன
　　ஒருவரதற் கல்ல வென்ன (வந்தனர்)

வசனம்.

அந்த சமையத்திலே கிழ விப்பிரரும் சுந்தரரும் மஹா ஜனங்களுடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

31.

தரு.

ஐயன்மாரே வெண்ணெய்நல்லூர் அசேஷவித்வ மஹாஜனங்கள்
வெய்யதாயோர் சண்டைவந்து வியாச்சியமாகி யிருவர் வந்தோம்
பெய்யும் பாலை நீரைவேறே பிரிக்கும் அன்னம் போல நீங்கள்
மையலற நாங்கள் சொன்ன வழக்கதனைத் தீர்த்திடுவீர்.

வசனம்.

அந்த சமையத்திலே மஹா ஜனங்கள் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால்:—

32.

விருத்தம்.

அங்கரூ ரூரர் தன்னை அங்கவன் கையிற் கட்டும்
கங்கணம் அறுக்கத் தானே கங்கணங் கட்டி வந்த
துங்கவிப்ரனையும் பார்த்துத் தொடர்ச்சியாட் சிகளுஞ்சொல்லி
இங்ஙனே வாக்கு மூலம் எமக்கு நீர் சொல்லு வீரே.

வசனம்.

அந்த சமையத்திலே கிழ விப்பிரனர் சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

33.

தரு.

அசேஷ வித்வ மஹா ஜனங்களே! இருவர் தம்மில்
ஆட்சியில் அவனும் தொடர்ச்சி நானுங் காண்!
விசேஷ மதனாலே முந்திநான் வாக்கு மூலம்
விவரமாய்ச் சொல்ல நீங்கள் கேளுங் கோள்
இவர்கள் பாட்டன் ஆரூரன் முன்னமே யடிமையாகி
எமக்கு முறியும் எழுதிக் கொடுத்தனன்;
அவனும் அவன் தன் புதல்வன் சடையனும்
அன்று முதலா யநுதினமும் என் ஏவல் செய்வார் காண்;
இப்புறம் இந்தப் பையல் தன்னையே சிறியவனென
ஏவலுக்கு நான் தொடர்ந்த தில்லை காண்;
அப்படியே நான் அன்பனிருக்கச்சே என்னை
அறியாமலே மணஞ் செய்ய வந்தனன்;
வந்த இவன் புத்தூரி லிருக்கச்சே நானும் போயிந்த
மண முனக்கு வேண்டாம் எனச் சொல்லி
என் தன் பின்னுடன் எழுந்துவா வென்று சொல்லி
எத்தனை பரிவா யழைக்கவே
உன்னை யாரறிவார்கள் போவென
இந்தப் பையல் *உதம்பியே என்னைப்
பித்த னென்னவே பின்னை நான் வெகு கோப மாகியே
இவன் தன் மடியைப் பிடித்திழுத்தனன்

---

* உதம்புதல்—கடிந்து கூறுதல்.

இழுத்த போதிலே இழுக்கலாமோ என்றென்னைத் தானுமே
வைது திட்டியும் எழுந்து மேல்விழுந்-தநுந்து போகவே
வழுக்கி மெத்தப் பிடித்துத் தள்ளியே
கூகூ என்று நான் வாய்திறந்தழத்
துடுக்குச் செய்தனன் செய்த தன்றியும்
கையி லிருந்ததோர் எதிரிடை முறிச்
சீட்டுத் தன்னையுங் கிழித்து வீசினன்
ஐயையோ இவன் செய்த பிழைதனைக்—கிழவனுன்
யாருடன் சொல்லி யாறப் போறேன் காண்
மூலப் பத்திரந் தன்னைப் பாருங்கோள்
இவர்கள் பாட்டன் முதலெழுத்தையும்
சோதித்துப் பாருங்கோள்
சாலவே இது ஆய்ந்து பாருங்கோள்
பார்த்து நீரினி தர்ம மாம்படி—சொல்லுவீர்களே.

வசனம்.

அந்த சமையத்திலே சுந்தரர் சொல்லுகிற வாக்கு மூலம் எப்படி என்றால் :—

34.

தரு.

ஏதொன்றும் நானறியேன் என்னவென்று சொல்வேனையா
நீதிநெறி யில்லாத நிந்தைவந்து வாய்ச்சுதையா ;
வருநாவ லோர்புகழும் வளமைபெறு நகரமெங்கள்
திருநாவ லூரிங்கு சேரமன்றித் தூரமன்றே ;
தந்தையா ராரூரா சடையனந்த நாள்முதலாய்
எந்தன்வாய் நாங்களங்கே இருந்ததெல்லாம் அறிவீர்கள் ;
தரைபரவு புத்தூரில் சடங்கவியார் தையல்தனை
வரையவென்றே இப்போது மணமீதி லிருந்ததே

வந்தனர்காண் இவாரோ மற்றிவரை நானறியேன்
அந்தணுர் இவரென்னை அடிமையென வேசொன்ஞர்;
இந்தமணம் வேண்டாங்காண் இனிமணைவிட் டெழுந்திரென்ருர்
சொந்தமெமக் கேவல்செய்து தொடர்ந்துபின்னே வாஎன்ருர்;
சாதனமென் றேயொன்றைத் தன்கையிலே பிடித்துக்கொண்டு
வாதுசெய்தே எனைவந்து மடிபிடித்து இழுத்தனர்காண்;
அடித்தேனென்ருர் பிடித்தேனென்ருர் அழுதழுது கூகூ என்ருர்
குடித்தனமா யிருந்தவெங்கள் குடிவாழ்க்கை குலைக்கவந்தார்;
காலம்வந்தால் கருப்புவந்தால் காவலர்கள் தெண்டங்கொள்வார்
ஏலங்கூறி என்பாட்டன் ஏதுக்கா அடிமைபட்டான்?
அந்தணர்கள் அடிமைபடல் ஆரேனுங் கேட்டதுண்டோ?
எந்தடவோ இனியிதனை இங்கறுத்துத் தீர்ப்பீரே.

வசனம்.

[சபையோர்:]—ஆனல் நல்லது, இருவர் வாக்கு மூலமுங் கேட்டோம். ஓகோ! கிழவனுரே! உம்முடைய கையிலே யிருக்கிற சாதன முறியை வரக்காட்டும் ஐயா!

35.

திரிபுடை.

[கிழவர்.]

எந்தன்கைமுறி கொண்டுவாஎன இசைக்கின்றீர் மறை
யந்தணீரினி
அந்தவோலையைக் கொணர இப்பொழு தஞ்சுவேன் காண்;
ஏதுக்காஎனில் முன்னம்என்கையில் எதிரிடைதனைக்
கிழித்துவீசிய
சூதுப்பையலிங் கிருந்துபேசிய தொடர்ச்சியாலே;
முன்னமேசெய்த செய்கைபோலவே மூலபத்திரந் தனையுஞ்
செயதிடில்
பின்னையென்செயப் போறேனினிப் பேசுவேன் காண்.

வசனம்.

"அகோ! விருத்தரே! அதுக்கெல்லாம் நாங்களிருக்கிறோம். எங்கள் கையிலே தாரும் ஐயா"—என்ன—"ஆனால் சாதனம் இந்தாருங்கள் ஐயா"—என்று கொடுக்க அந்த சாதனம் வாசிக்கிறதற்குக் கணக்கப்பிள்ளை வருகிற விதம் எப்படி என்றால்:—

36.

விருத்தம்.

வேதன்மா மரபு தன்னில் விளங்குசீர் கருணர் கோமான்
ஆதியில் முக்கட் டேவன் அஸ்தக னென வள்ளல்
ஓதனு புரிக்கு வேந்தன் உயர்வெண்ணெய் நல்லூ ரண்ணல்
சாதனந் தனைவா சிக்கச் சபைதனில் வருகின் றானே.

37.

தரு.

* கர்ணிகா நந்தனன் வந்தனன்—இந்தக்
களரிக் குகந்து நயந்தனன் வந்தனன்
மேலு முயர்ந்தனன் சால வியந்தனன்
கோலஞ் செயந் தனன்—நேரே
அரையி லெழுத்தாணிக் கூட்டினன்—மலர்
அங்கை பிடித்ததோ ரேட்டினன்
ஏட்டின்—இங்கித நாட்டினன் நல்ல குணுட்டியன்
மிஞ்சிய தாட்டிக னானான்.
சங்கு தொங்கு சோமன் உடுத்தனன்—பட்டுத்
துப்பட்டி கட்கத் தொடுத்தனன்
புன்மை தடுத்தனன் துன்மை விடுத்தனன்
நன்மை யடுத்தனன்—ஆமோன். (கர்ணிகா)

---

* கர்னகி—சித்திரகுப்தர் தேவியருள் ஒருவர்.

வசனம்.

கணக்கப்பிள்ளை :—" அகோ! மஹா ஜனங்களே! அனைவருக்குந் தெண்டன் ஐயா."

சபையோர் :—" ஆசீர்வாதம்! இந்த சாதனத்தை வாசியும் பிள்ளாய்!"

கணக்கப்பிள்ளை :—" ஆனால் வாசிக்கிறேன் கேளுங்கோள்! ஐயா."

38.

விருத்தம்.

ஸ்ரீமது வெண்ணெய் நல்லூர்த் திருநகர்ப் பித்த னார்க்கு
நாமவா ரூரன் சைவன் நல்கிய அடிமை ஓலை
தாமினிப் பிள்ளை பிள்ளை தரந்தரம் அடிமை கொண்டார்
ஆமிதற் கையம் இல்லை ஆரூரன் எழுத்து மீதே.

வசனம்.

ஆனால், சுந்தரா! உங்கள் பாட்டன் ஆரூரன் கையெழுத்து வேறே யிருந்தால் இதுக்கும் அதுக்கும் லிபி சோதனை பார்க்க வேணும், சீக்கிரமாய் அழைப்பியும் பிள்ளாய்.

அப்படியே அழைப்பிக்கிறேன் ஐயா.

ஆனால், சுந்தரர் கணக்கப்பிள்ளை பின்னையும் இருக்கிற பிராமணர் லிபி சோதனை பார்த்து உண்டானபடிக்குச் சொல்லுங் கோள் என்ன அவர்கள் பார்த்துச் சொல்லுகிற விதம் யெப்படி என்றால் :—

39.

விருத்தம்.

* ஒச்சமொன் றில்லை ஐயா உடனுயி ரெழுத்து மெல்லாம்
இச்சை யிச்சையதாய் நாங்கள் எழுத்தெழுத் தினையும் ஆய்ந்து
மச்சங் கொண் டுரைக்கப் பொன்னின் மாற்றெனப் [பார்த்தோம் ஐயா
அச்சிலே போட்ட தென்ன வாகிய எழுத்துத் தானே.

* ஒச்சம்— குறைவு.

வசனம்.

அந்த வசனங் கேட்டு சாதனத்தைக் கிழவனார் கையிலே கொடுத்து மகா ஜனங்கள் சுந்தரருடனே சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

40.

விருத்தம்.

பழுது பிழை யேதுமில்லை பார்க்கிலினிச் சுந்தரனே
எழுதி வழக் கில்லையென்று இயம்புவதும் அறியாமோ
முழுது மத ஞலிந்த முதியர்வழக் கேஜயங்காண்
அழுத பிள்ளை பால்பெறுமென் றவர்பின்னே நடவாயே.

வசனம்.

அந்த சமையத்திலே மகா ஜனங்கள் கிழவனாரைப் பார்த்துச் சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

41.

திபதை.

முதியஅந் தணரே! மொழிவது கேளும்
பதியவும் மடிமைப் பத்திர மதனில்
சாக்ஷியும் புத்தியும் தானில்லை யெனினும்
ஆக்ஷியா யெழுத்தொன் றமர்ந்திருந் ததனால்
ஜெயமும தெனவே செப்பினே மினியே
சுயமதா இவனைத் தொண்டுகொண் டருளும்
இப்படி யிவையே யிருந்ததே யினிநீர்
மெய்ப்படி யாக விளம்புதல் வேண்டும்
வித்தக மான வெண்ணெய்நல் லூரில்
பித்தனெ ரெனவே பேருஞ்சொன் னதனால்
உம்முடை முகத்தை யொருக்காலுங் காணோம்
உம்முடை பேரை யொருக்காலுங் கேளோம்

இந்தநாள் வரைக்கும் யாமறி யாமல்
இந்தவூர் தனிலே யெங்ஙனே வீடு?
கையில்நெல் லியைப்போற் காணவே நாங்கள்
ஐயமில் லாமல் அறைந்தருள் வீரே.

42.

விருத்தம்.

அந்தண ருண்மை யெல்லாம் அறிகுவன் நானே நீங்கள்
எந்தனை யறியோம் என்றீர் இப்பொழு தெந்தன் பின்னே
வந்திடு வீரே யாகில் மனைதனை வாழ்வு தன்னைச்
சந்ததி தன்னைப் பெண்டிர் தம்மையுங் காண்பிப் பேனே.

வசனம்.

இப்படி யாகக் கிழவனார் சொல்லி முன்னே போக எல்லாரும் எழுந்திருந்து பிறகே போகிற போது வீதியிலே கிழவனாரைக் கண்டபே ரெல்லாம் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

43.

சம்பை.

(1) ஆரூரன் குடிவாழ்க்கை அழிக்கவந் தனன்பாரும்
ஊராரும் இவன்மாய்கைக் குள்ளானார் பாரும்!

(2) தாலிகட்டும் வேளைவந்து தடுத்துப்போ ரிட்டிந்த
நீலியிட்ட நிந்தையென நிந்தையிட்டான் பாரும்!

(3) அடிமையெனச் சொன்னதுவும் அதுக்கோலை [கொணர்ந்ததுவும்
கொடுமையிது * கூற்றனுக்குங் கூற்றனிவன் கண்டீர்!

(4) அந்தோலை கிழித்திடினும் அதுசாவா தெனச்சொல்லி
முந்தோலை யெனவென்று மூறிகொணர்தல் பாரீர்!

---

* காலகாலன் என்பதைக் குறித்தது.

(5) வேறுமுறி கொணர்ந்தாலும் மெய்யாக அம்முறியில்
மாறுபடா எழுத்திருக்க வகைசெய்தல் பாரீர் !

(6) தள்ளினல் விழுங்கிழவன் தன்வலியைப் பாருமெத்த
துள்ளுவதும் பேசுவதும் தொடருவதும் பாரீர் !

(7) இந்தஆ ரூரன்தனை யிழுத்தடிமை யெனச்சொல்லும்
அந்தவாய்க் *கன்னம்விஷம் ஆகாமற் போமோ ?

(8) மெத்தமெத்தத் துள்ளியிவன் வீண்சண்டை யிட்டிழுத்த
கைத்தலத்துக் கெந்நாளும் †கப்பரைவா ராதோ ?

(9) ‡காயமிரு கூருகி §கண்கள்நெருப் பாயெரிந்து
மாயனிவன் இருகாலும் ||வாதமா காதோ ?

(10) தொடர்ந்துவரும் இவன்வீடு ¶சுட்டகா டாகியின்னம்
அடுத்தபொழு $தாகாச மூகிப்போ காதோ ?

வசனம்.

இப்படியாகக் கண்டபே ரெல்லாம் நிந்திக்க மகா ஜனங்களும் சுந்தரரும் பின் தொடர்ந்து வர. கிழ அந்தணர் கோயிலிலே புகுந்து அந்தர்த்தானமாய் மறைந்து போனபோது சுந்தரருக்கு ஞானம் வந்து புரண்டு புரண்டு அழுது புலம்புகிற விதம் எப்படி யென்றால் :—

---

* ஆல முண்டதைக் குறித்தது.

† பலி யேற்பதைக் குறித்தது.

‡ அர்த்தநாரீசுரர் என்பதைக் குறித்தது.

§ மூன்று கண்களும் முச்சுடர் என்பதைக் குறித்தது.

|| நடராஜர் என்பதையும் அவர் கால்மாறி யாடினதையும் குறித்தது.

¶ கோயில் சுடுகாடு என்பதைக் குறித்தது.

$ அரூபி என்பதைக் குறித்தது.

44.

கலிப்பா.

நிராமயமாய் நிர்க்குணமாய் நிரஞ்சனமாய் நித்தியமாய்ப்
பராபரமாய் நின்றுலகைப் படைத்தளித்துத் துடைப்பவன்நீ !

என்னையொரு பொருளாக எழுந்தருளி வையமிசை
மன்னுமொரு வேதியன்போல் வந்ததென்ன திருவருளோ !

மாலயனுந் தாம்வலிய வந்தடிமைப் பட்டொருவொக்
கோலதனை யிடுவோமென் றுரைக்கினுங்கொள் ளாதவன்நீ !

ஏதுமறி யாதிருக்கும் எனைவலிய வந்தடிமைச்
சாதனமீ தெனக்காட்டித் தடுத்தாண்டு கொண்ட தென்னே!

காளியுடன் வாதாடுங் கர்த்தாவே ! ஒன்றறியா
ஞாளியெனை வாதாட நயந்ததென்ன திருவுளமோ !

சுருதிமொழி யால்முனிவர் தோத்திரிக்குங் கர்த்தாநீ
பொருதிமிர நாயேன் புகல்வசையைப் பொறுத்ததென்னே !

தேவர்களும் முனிவர்களும் தீண்டாத திருமெய்யைத்
தாவியிழுத் தேநாயேன் தள்ளவுமநீ சகித்ததென்னே !

அன்னதொரு சுரர்முறைகேட் டஞ்சலெனக் காக்கின்ற
முன்னவன்நீ கூகூஎன் முறையிட் டழுததென்னே !

தலைவன்நீ நானென்ன சண்டையிட்ட மாயனயன்
நிலைவழக்கைத் தீமலையாய் நின்றுபண்டு தீர்த்தவன்நீ

குறையிரந்து கைகட்டிக் கொண்டுவெண்ணெய் நல்லூரில்
மறையவர்கள் முன்பாக வழக்குரைத்து நின்றதென்னே !

இத்தனையும் என்பொருட்டால் எய்தினைநீ முன்னுளில்
மெய்த்தவம்நான் செய்ததென்னே வெளிப்பட்டுச்
சொல்லுகிலாய் !

அஞ்ஞான மணந்தனை நீ அடுத்துவந்து தடுத்ததனால்
சுஞ்ஞான மணம்புணர்ந்து சுகித்திடவோ சொல்லுகிலாய்!

ஆண்டவன்நீ ஆண்டாயே ஆண்டபடி யேயென்னை
வேண்டியின்னம் முன்போல வெளிப்பட்டு வாராயோ!

வாராத போதுமென்றன் மன்னுயிரைத் தாங்குதற்காச்
சீராக நானினியே செய்யும்வகை சொல்குவையோ!

வசனம்.

இப்படியாக சுந்தரர் புலம்புகிற சமையத்திலே தேவர்கள் புஷ்பமாரி பொழிய தேவதுந்துபி முழங்க ஆகாச மார்க்கத்திலே சுவாமியார் அந்தர்த்தானமாய் நின்று சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

45.

திபதை.

சுந்தரா முதலே தொண்டனீ யாகி
எந்தன்சீ வடிக்கீழ் ஏவல்செய் குவைகாண்
அந்தரா ளதனில் ஆங்கமேனர் பொருட்டால்
நந்தமா ணையினால் நானில மதனில்
வந்துநீ பிறந்தாய் மற்றுமுன் பிறகே
வந்துநா முனையே வலியஆட் கொண்டோம்
அன்னகா லையிலே ஆங்கரித் திழுத்து
மன்னியே என்னைநீ வன்மைசெய் ததனால்
மாமனோ கரமாய் வன்தொண்ட னெனவே
நாமமு முனக்கு நாமளித் தனம்காண்
இனியெமக் கினிதா யிசைந்த அர்ச்சனையாக்
கனிவினாற் பதிகஞ் சமுறுவாய் நீயே.

46.

விருத்தம்.

[சுந்தரர் கூறுவது :]

சீதள மலரோன் மாயன் தேடியுங் காண்கி லாமல்
வேதமா கமமு மெல்லாம் விரித்துரைத் தறிகி லாத
*கோதிலா வுனது தெய்வக் குணப்பெருங் கடலை யாய்ந்தே
ஏதொன்று மறியா நாயேன் ஏதெனச் சொல்லு வேனே.

வசனம்.

அப்போது சுவாமி "என்னைப் பித்தா என்று சொன்னபடிக்குச் சொல்லி 'பித்தா' என்றெடுத்துப் பாடி யினிமேலும் தலங்களெல்லாம் பாடும் பிள்ளாய்"—என்ன அப்போது சுந்தரர் பாடுகிற விதம் எப்படி என்றால் :—

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாயபெண் ணைத் தென்பால்வெண் ணெய் நல்லூரருட் [டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே.

திருச்சிற்றம்பலம்.

47.

த்விபதை.

பதிகமிந் தனமாய்ப் பண்ணினுற் பாடி
மதிபுனை சடையார் மகிமையைப் போற்றி
வெண்ணெய் நல்லூரை விடுத்தினி தகன்று
நண்ணியே தமது நாவலூர் வந்து

* "கோதிலா அமுதே யின்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை யறிந்தென் சொல்லிப் பாடுகேன்"— தடுத்தாட்-(எ௨)

* பவமகலத் துறையில் பரவியே சிவனைத்
† தவநெறி யெனக்குத் தாவெனப் பாடி
மற்றுள பதியும் மகிழ்வினு னிறைஞ்சி
வெற்றிசேர் தில்லை மேவியே நினைந்து
நந்துநீள் பெண்ணை நதியினைக் கடந்து
அந்தியம் போதில் அதிகைமா நகரத்
தெல்லைவந் தணுகி யித்தல முன்னே
சொல்லும்வா கீசர் சூழ்பதி யெனவே
அருகிலோர் மடத்தில் அமர்ந்திருந் தருளி
பரிசனத் துடனே பள்ளிகொள் போதில்
முதியஅந் தணராய் முக்கண ரணுகி
பதியவே தலையில் பாதத்தை நீட்டிக்
கரந்துபோ னதுவும் கண்டுள மகிழ்ந்து
சுரந்தநல் லருளைத் துதித்துடன் பாடி
வடகங்கை யெனவே வருமொரு கெடிலத்
தடநதி தனையுந் தாண்டியே அப்பால்
திருமாணி குழியுந் தினைநக ருந்தொழு
தரியதில் லையிற்போ யம்பலம் பணிந்து
அந்தரத் தொருவாக் காரூர்க்கு நீயே
சுந்தரா வாவெனச் சொன்னதுங் கேட்டுக்
கொள்ளிடங் கடந்து குறுகியே ஞானப்
பிள்ளையார் முன்னம் பிறந்தசீ காழி
மிதித்திட அஞ்சி வெளிநின்று பரவிக்
கதித்திருக் கோலக் காவும் புன்கூரும்
வேறுள பதியும் விரும்பியே தொழுது
கூறுகா வேரியின் கொழுங்கரை சென்று

---

* ‘பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம’—தடுத்தாட்—௭௧.
† ‘தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே”
—சுந்தரர் தேவாரம் (திருத்துறையூர்).

மயிலாடு துறையும் மாகாளம் புகலூர்
கயிலாயந் தன்னைக் கருதியே பணிந்து
நம்பனு ரருளால் நகருளா ரெவரும்
இன்பமாய் மனதில் எதிர்கொண்டு செல்ல
செய்யஆ ரூரிற் சிறப்புடன் வந்து
ஐயனைப் பணிந்தே அருந்தமிழ் பாடி
காயமே யுருக கருத்துமே உருக
நேயமாய்ப் பாவி நின்றனர் தாமே.

பரவை நாச்சியார் திருக் கலியாணம்.

வசனம்.

இப்படியாகத் திருவாரூரிலே வந்து சுவாமியைப் பணிந்து சுந்தரர் இருக்கிற சமையத்திலே பரவை நாச்சியார் சுவாமியைச் சேவிக்க வருகிற விதம் எப்படி என்றால் :—

48.

விருத்தம்.

சீதள மலர்மா தென்னச் செங்குந்த வேலி யாரில்
பூதல மகிழ வந்து பொற்புடன் பிறந்த மின்னாள்
மாதர்கள் சேனை சூழ மதிமுக மலர்ந்து பொன்னின்
பாதசா லந்தொ னிக்கப் பரவையாள் வருகின் றாளே.

49.

தரு.

பரவை வந்தாளிதோ பாரீர்!

பரவைவந் தாளிதோ பாதநூ புரமுடன்
கரசரோ ருகவளை கலீல்கலீல் கலீலென (பரவை)

தனபாரக் கச்சிலொளி தக தக தக என்ன ;
கனமான கிண்கிணியோசை கணீல்கணீல் என்ன (பரவை)

கடந்துகா தினைமீண்டு கண்ணினை வாளி யார்த்து
தொடர்ந்துமேல் வந்துபட்டு சுறீல்சுறீல் என்ன (பரவை)

தாவியே சேடிமார்கள் சரணமெச் சரிக்கையென
மேவிய அன்னம்போல மெள்ளமெள் ளெனநடந்து (பரவை)

வசனம்.

இப்படியாக பரவை நாச்சியார் வந்து சுவாமியைச் சேவித்து திரும்புகிறபோது சுந்தரர் பார்த்துத் தம்முடை மனதுடனே சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

50.

பதம்.

ஆரோ எவரோ அறியேன் மனமே அரனரு ளிதுதானோ!
சீரோதிய புட்ப மதனராயன் பட்டத் தேவியோ கமலச்
சிங்காதனப் பெண்ணோ!

மின்னலல்ல வடிவொளி யாதத னாலே
விளக்குமல்ல நல்ல அவயவத் தாலே ;
கன்னலல்ல மதன்வளை யாதத னாலே
காமனல்ல வுருவாய் வந்தத னாலே ;
அன்னமல்ல சிறகில் லாதத னாலே
ஆவியல்ல வுடற்கப் புறத் தாலே ;
சொன்னமல்ல மாற்றொன் றில்லா ததனாலே
சுருபமல்ல மறுவில் லாத தனாலே ;
சித்திர மல்ல நடக்கின் றதனாலே
தெய்வமல்ல விழியிமைக் கின்ற தாலே ;
குத்திர வாள்விழியால் கூற்ற னெனினும்
கூற்றனல்ல நின்று கொல்லாத தனாலே—[ஆரோ]

வசனம்.

பாவை சுந்தரரைப் பார்த்து தன் மனதுடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

51.

பதம்.

சந்திரனோ இந்திரனோ சக்ரதர னோஎங்கள்
தம்பிரான் பெறுங் கந்தனோ—மனமே
சுந்தர வசந்தனோ அந்தரசெ யந்தனோ
சுருப நூதன மதனனோ—மனமே !
இவ்வுருவம் எவ்விடத்துங் கண்டதில்லை கேட்டதில்லை
இவரை எவ்வகை அணுகுவோம்—மனமே !
அவ்வுருவ மதன்மீதில் ஆசைகொள்ள லாமோவென்
றருவமதன் பொருத லானன்—மனமே !
இருவர்கண்ணும் ஒண்ணுக் கொண்ணுக் கிலக்கணியாகவே
இழுக்குதினி என் செய்குவேன்—மனமே !
ஒருவ ரிவர் தமைவிடுத் தேகக் காலெழுகு தில்லை
உய்வண்ணம் எவ்வண்ணங் காண்—மனமே !
இதுவரைக்கும் ஒருவர்தம்மை இருதயத் தெண்ணுதநான்
இவரை யெண்ணின தென்னவோ—மனமே !
மதிவிதியின் முறைமையோ ஈசனருளோ இனி
வரவரத் தெரியு மல்லோ—மனமே !

52.

விருத்தம்.

'மனமும் உயிரும் இவரைவிட்டு
வருகு தில்லைகாண் வெறுங்கூட்டை
இனிது முனதாய் நாணம்ஒன்றே
பெயர்த்தே யிழுத்துப் போகுதையோ

தனமு மலைபோல் வளர்ந்தெழுந்து
தழைந்தே குழைந்து விம்முதுகாண்.
இனியென் செய்வேன் ஈசனருள்
எனமோ இல்லத் தேகுவனே.

வசனம்.

அந்த சமயத்திலே அந்தியம் பொழுது வருகிற விதம் எப்படி என்றால் :—

53.

கட்டளைக் கலித்துறை.

சுந்தர னீசனுக் கன்பன் விகாரத் துயரந்தன்னை
எந்தட வோகண் டிருப்போ மெனக்காந் தேகினன்போல்
முந்தவெய் யோனந்த மேற்கே மறைந்தனன் மூடியிருள்
அந்தியம் போதுவந் தந்தாத் தேவந்த தம்புலியே.

54.

விருத்தம்.

வெண்ணிலவு புவிமடந்தை வெண்படாம் போர்த்ததென
விளங்கித் தோன்ற
தண்ணிலவு கடல்தனது மைந்தனர சாள்கின்ற
தருக்கிற் பொங்க
குண்ணுலவு குளிர்காற்றுக் கொழுந்தெழுந்து நெருப்பை
யள்ளிக் கொண்டு வீச
எண்ணில்பல கமலமலர்ச் சுடுசரங்கள் தொடுத்துமத
னெய்கின் றானே.

வசனம்.

அந்த சமையத்திலே விப்ரவக்கிரன் இவளாரென்று விசாரித்து வந்து சுந்தரருடனே சொல்லுகிறான். தேவடியாரில் பரவையா ரென்று சொல்லச்சே சுந்தரர் விரகதாபப் படுகிற விதம் எப்படி யென்றால் :—

55.

தரு.

(1) வஞ்சி யொருத்தியவ் வானத்து மின்போல
வந்தனள் கண்டனன் சிவனே !—அவள்
மாயா விகார வலைவீசு வாள்போல
மயக்கிட்டுப் போயினள் சிவனே !

(2) மையற்கண் கணையைப் புருவவில் தன்னை
வளைத்துத் தொடுத்தனள் சிவனே !—அது
வந்து புதைத்தெந்தன் மார்பினி லின்னம்
வடுவா யிருக்குது சிவனே !

(3) இவன் ஆர்நடு வேமதன் வந்து பூவாளியை
என்மீதி லெய்கிறுன் சிவனே !—கணை
எய்வது மல்லாமல் இவன்பரி வாரங்கள்
எல்லாம் பொருகுது சிவனே !

(4) ஓகோ மதனன் இதனுலல் லோமுன்
னுளுத்த பொடியானுன் சிவனே !—அவன்
உயிர்தனை மீள அருள்கொண் டளிக்கும்
உனையல்லோ சொல் லேணுஞ் சிவனே !

(5) சந்திர னுகுங் குளிர்ந்தவ னென்னைத்
தழல்கொண் டிறைக்கிறுன் சிவனே !—அந்தச்
சந்திரன் பின்னும் பிழைக்கவே தேய்க்குமுன்
தாளினை யென் சொல்வேன் சிவனே !

(6) உக்கு விஷத்தை யளிக்குங் கடல்தான்
உறுக்குது என்னையுஞ் சிவனே !—அந்த
ஓதக் கடலைச் சுவருமல் விட்டவுன்
மைந்தனை யென் சொல்வேன் சிவனே !

(7) அந்தப்பெண் மாயத் தகப்பட்டா லீடெதல்லாம்
ஆரென் றுறுக்குது சிவனே !—என்னை
ஆண்டநீ சும்மா இருக்கத் தகாதினி
அருள்செய்ய வேணும் காண் சிவனே !

வசனம்.

இப்படியாக, சுந்தரர் விரகதாப மாயிருக்க அங்கே பரவை நாச்சியார் பாங்கி யுடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :

56.

விருத்தம்.

பாங்கியே தியாகர் தம்மைப் பணிந்துநாம் வந்த போது
ஆங்கனே றொப்பி லாத அதிசய வடிவ மாகி
பூங்கணை மதன னென்னப் பொலிந்தனன் அவன்தான் ஆரோ?
சாங்கமா யெனக்கு நீயே சாற்றுவாய் சாற்று வாயே.

வசனம்.

பாங்கி சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

57.

விருத்தம்.

அன்னமே கேளாய் நீயே யவர்முனைப் பாடி நாட்டிற்
பன்னுசீர் நாவ லூரிற் பதிந்துவாழ் சைவ ராளோர்
மன்னியே சிவன்புத் தூரில் வலியஆட் கொண்ட தொண்டர்
இன்னமும் அறிகி லாயோ இனியசுந் தரன்காண் பேரே.

வசனம்.

இப்படியாக பாங்கி சொன்ன வார்த்தையைக் கேட்டு விரக தாபம் மிஞ்சி பரவையார் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

தரு.

58.

எந்தனுவித் தோழியேநான் ஏதுசெய்வேன் கண்டபோதே
சிந்தைதனி லவர்தாமொரு திருடன்போல் வந்துபூந்தார்,
தாளிணைக்கோ மலர்ந்தசெழுந் தாமரைமு கத்தினுக்கோ
தோளிணைக்கோ மார்பினுக்கோ சுந்தரஜெய் யாரத்துக்கோ,
காதிணைக்கோ கண்ணிணைக்கோ கமலமான கைவீச்சுக்கோ
ஏதினுக்கோ சிந்தைதனில் ஏராளமா யாசைகொண்டேன்,
இவர்தமது மெய்ச்சொருபம் எல்லாமங் கிருக்கட்டும்
அவர்சிறிய நகையொன்றும் ஆவிதனை யுருக்குதையோ,
மையலொன்று வந்தாலே வளைகலைநாண் மூன்றும்போச்சு
செய்யும்வகை தானேதினி சிவனருளைத் தெரிகிலேனே!

வசனம்.

பின்னையும் விரகதாபம் மிஞ்சி சந்திரனைத் தூஷணை பண்ணுகிற விதம் எப்படி யென்றால் :—

59.

தரு.

(1) வாழிமதி யென்னையல்லால்
மற்றேவர்க் குங்குளிர்ந்தாய் —வெண்ணிலாவே!
ஏழையென்றே காயலுற்றாய்
எனக்குமுனக்கும்பகையென்னவோ-வெண்ணிலாவே!
(2) உந்தனையென் முகம்போல
ஒப்பாரிகண் டுறவுகொண்டேன் —வெண்ணிலாவே!
அந்தவுறவும் பாராமல்
அழல்போலக் காயலுற்றாய் —வெண்ணிலாவே!
(3) நீமுதலே குருத்துரோகி
நினக்குமொரு வுறவுண்டோ? —வெண்ணிலாவே!

தீமையான நின்னைப்பாம்பு
தீண்டியுங்கொல் லாதென்னவோ —வெண்ணிலாவே !
(4) தேய்த்த*வீரன் பண்டுநின்னை
சிவனோடு விட்டதென்னோ —வெண்ணிலாவே !
வாய்த்தமயல் கொண்டுழலு
மாதர்செய்த பாவமென்னோ —வெண்ணிலாவே !

வசனம்.

மன்மத தூஷணை எப்படி என்றால் :—

60.

திரு.

(1) எனை ஏதுக்குக் கொல்லுறாய்—மதனா !—உனக்
கென்னுடனே என்ன பகை—மதனா !
(2) உனை யின்று கும்பிடுகிறேன்—மதனா !—தமியேன்
ஒருத்தி யென்னை மன்னியாய்—மதனா !
(3) நிமலருக்கு நானடிமை—மதனா !—அவர்
நினையெரித்த தறியாயோ—மதனா !
(4) கமலவிழி துயிலாது—மதனா !—தனித்த
கன்னிமேல் பொருகுவாரோ—மதனா !

வசனம்.

தென்றல் தூஷணை பண்ணுகிற விதம் எப்படி என்றால் :—

61.

திரு.

(1) குன்றிலே பிறந்துவந்த தென்றலாரே !—மெத்தக்
கொடுந்தழல்போல் வீசுவரோ தென்றலாரே !
மண்ணிலே சஞ்சரிக்குந் தென்றலாரே !—தனி
மாது தன்னைக் காய்குவரோ தென்றலாரே !

வீரன் = வீரபத்திரக் கடவுள்.

(2) ஐயையோ எனையொறுத்தால் தென்றலாரே !—உன்னை
* அரவமெல்லாம் விழுங்காதோ தென்றலாரே !
செய்யும்வகை யொன்றுமில்லை தென்றலாரே !—இனிச்
சிறிய வென்னைக் காத்தருளாய் தென்றலாரே !

வசனம்.

அந்தச் சமையத்திலே தோழிமார் பண்ணுகிற சயித்திய உபசாரங்கள் பொருமல் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

62.

தரு.

சுகந்த கெந்த பன்னீ ரென்றே
சுடச் சுட்டவெந் நீரிறைத்தார்
நிகழ்ந்த புஷ்பத் தூளிரென்றே
நெருப்பினையோர் பாயல் செய்தார்
முகந்து கொண்டு பரிந்த வார்த்தை
மொழிவ மென்றே வசை பேசினார்
அகந்தையான தோழிமார்கள்
அனைவரும்நல் லவர்தாமே.

வசனம்.

இப்படியாக பரவைநாச்சியார் நித்திரை யில்லாமல் விரக தாபப்படுகிறதை தியாகராய சுவாமி கண்டு எழுந்தருளி வந்து தலத்தார் சொப்பனத்திலே திருவாய் மலர்ந்த விதம் எப்படி யென்றால் :—

---

* "காலே மிகவுண்டு காலே யிலாத கணபணம்"—கந்த ரலங்காரம்.

63.

விருத்தம்.

பனிமொழிப் பாவை யாரைப் பாவுமா ரூர னார்க்குக்
கனிவினு லளித்தோம் நாமே காதலாய்த் தலத்தார் நீங்கள்
நனிபெறு மகிழ்ச்சி பொங்க நாளையே காலை தன்னில்
இனியநல் முகூர்த்தந் தன்னில் இருவர்க்கும் மணஞ்செய் வீரே.

64.

விருத்தம்.

காலமே எழுந்தெல் லோருங் கன்னிகைப் பாவை யாரைக்
கோலமே செய்து சைவக் குரிசிலா ரூரர் தம்மை
சீலமா யலங்க ரித்துத் திவ்யசந் நிதியிற் றூனே
ஞாலமே மகிழ்ந்து தெய்வ நன்மணஞ் செய்வித் தாரே.

வசனம்.

அந்த சமையத்திலே சுவாமி அசரீரியாய்த் திருவாய் மலர்ந்த விதம் எப்படி யென்றால் :—

65.

விருத்தம்.

அம்புவி மகிழ இந்தப் பாவையா ருடனு ரூரா
இம்பரிற் போக மெல்லாம் இனியநு பவித்து வாழ்வாய் ;
நம்பெருந் தோழ னென்றே நாமமும் அளித்தோம் சந்த்ர
விம்பமாய்க் கோல மெல்லாம் வியப்புடன் திரிகு வாயே.

பாவைநாச்சியார் திருக்கலியாணம் முற்றும்.

வசனம்.

இப்படியாக சுவாமியார் அநுக்கிரகத்தினுலே வேறே திவ்ய அலங்காரமான அரண்மனை சமைத்து அதிலே யிருந்து பாவை யாரும் சுந்தாரும் சகல போக பாக்கியங்களும் அநுபவித்துக் கொண்டு வருகிற நாளையிலே ஒருநாள் சுந்தரர் சுவாமியாரைச் சேவிக்க வருகிற விதம் எப்படி யென்றால் :—

66.

திபதை.

சங்கீத மேளம் பொங்கத் தவளச்சங் கார்ப்ப ரிக்க
இங்கித வீணை பாட இன்னிசை பல வாசிக்கத்
திருநாவ லூரன்வந்தான் சிவன்திருத் தோழன் வந்தான்
என்னவே சின்ன மூத இருபுறங் கவரி வீச
மன்னிய அடைப்பங் கொண்டு வரும்படி தொழும்பர் சொல்ல
* கைக்கடா குரங்கு கவுதாரி கோழி
தக்கனார்க் கிணையாய் தத்தைமான் கலைகள்
கொண்டுடன் வருக சூலவுமெய்ஞ் ஞான
பண்டித ரனேகர் பாவியெங் கெங்கும்
ரத்ந குண்டலமும் ரத்ன கங்கணமும்
முத்துநீள் வடமும் முப்புரி நூலும்
பொன்னரை நாணும் பூஷண வகையும்
மின்னவே புனைந்து வேடிக்கை யாகி
திருநீறு நெற்றியில் திலதமு மொளிர
அரியசீர் பொன்னின் ஆடையுந் தரித்து
குலவுபொற் பாதக் குறட்டுமேல் நடந்து
இலகிய ராஜ வீதிகள் கடந்து
சந்நிதி வீதி தனையெலாங் கடந்து
கொன்னல்சீர் பெரிய கோபுரங் கடந்து
தேவர்கள் பரவுந் தேவா சிரிய
காவணந் தனையுங் கடந்துவந் தனரே.

வசனம்.

இப்படியாக சுந்தரர் வருகிறபோது தேவாசிரிய மண்டபத்தில் அடியார்கள் கூட்டத்திலிருந்த விறல்மிண்ட கண்டர் வருகிற விதம் எப்படி யென்றால் :—

* "கைக்கடா குரங்கு கோழி சிவல்கவு தாரி"
—தடுத்தாட்-கஅஎ.

67.

விருத்தம்.

மலையணு டதனிற் கொற்ற வளம்பெறு செங்குன் றூரில்
குலவுவே ளாளர் தங்கள் குலத்தில்வந் துதய மானோர்
தலமெலாம் புகழு நீறு சாத்தியே சைவ ரானோர்
விலகிலார் சிவனார் தொண்டர் விறல்மிண்டர் வருகின் றாரே.

68.

தரு.

எங்கள் சைவ விறல்மிண்டர் எழுந்து வந்தனர்
திங்கள் வேணிச் சிவனார் பாதஞ் சிந்தைதனில் மறவாத (எங்)
உருத்திராக்ஷ மாலைபூண்டு உடலமெல்லாம் நீறுபூசி
சித்திரவை ராக்கியமாகி சிவசமயம் பிசக்கிலாத (எங்)
சீலமின்றிக் கோயில்வரும் தீயர்தம்மைக் கொல்வேனென்று
காலசூலம் போலக்கையில் கண்டகோ டாலியைப்பற்றி (எங்)

வசனம்.

இப்படியாக வந்து சுந்தரரைத் தூத்திப் போகிற விதம் எப்படி என்றால் :—

69.

தரு.

சால அடி யார்தமையுஞ் சரணஞ்செய் யாமல்
சீல மொன்று மில்லாத தீயவிட னாகி
செல்கின்றாய் சுந்தரா சிவன் *சலிகை யோதான்
கொல்குவே னானெனினுங் குதிகாலைப் பிளந்தே
கண்ட கோ டாலியுமென் கையுமறி யாயோ ?
துண்ட துண்ட மாய்ப்பிளந்து துணிப்பதறி யாயோ ?

* சலிகை = ஆதரவு.

சாம்பசிவ னூர்தமக்குத் தந்தை நீயா னாலும்
விம்பின னுன்னையினி விடுகிலேன் நானே.

வசனம்.

இப்படியாகத் தோத்தி வருகிறபோது சுந்தரர் முறையிட்டுக் கொண்டு ஓடுகிற விதம் எப்படி என்றால் :—

70.

தரு.

பரனே சிவனே முறையோ ! முறையோ !
பரமே சுரனே முறையோ ! முறையோ !
வரனே அரனே முறையோ ! முறையோ !
வலியாண் டவனே முறையோ ! முறையோ !
காமேல் மழுவைத் தரித்தாய் முறையோ !
கண்டகோ டாலியைக் கையினிற் கொண்டு
மூரணைத் துணிப்பேன் எனவே வந்தான்
மூவா முதலே ! முறையோ ! முறையோ !

வசனம்.

இப்படியாக முறையிட்டுக் கொண்டு ஓடிக் கோயிலிலே புகுந்து கதவைச் சாத்திக் கொண்டபோது விறல்மிண்டர் போய்க் கதவை யிடிக்க, சுவாமி திருவாய் மலர்ந்த விதம் எப்படி யென்றால்:—

71.

விருத்தம்.

சுந்தரன் வேறே யல்ல சுயமிவன் நாமே யாகும்
எந்தா மிருந்தா லென்ன எவ்விதம் வந்தா லென்ன
நந்தமக் கின்ப மாகும் நல்விறல் மிண்ட நீயே
வந்துதண் டிப்ப தென்ன மற்றுநீ ஏகு வாயே.

வசனம்.

அந்த வசனங் கேட்டு விறல்மிண்டர் சொல்லிக் கொண்டு போகிறவிதம் எப்படி யென்றால் :—

72.

விருத்தம்.

ஏதிவை சொல்வ தெல்லாம் என்தொண்டுக் கிடையூ றாக
ஓதிய நாயன் கூட ஊரனும் புறம்ப தாகும்,
நீதியி லாத வூரில் நிற்கவும் ஒண்ணா தையோ
போதுவ னாரூ ரெல்லைப் புறத்தையும் மிதிக்கொ ணாதே.

வசனம்.

இப்படியாக விறல்மிண்டர் சுவாமியாரையும் சுந்தரரையும் * வெலி போட்டுப் போன பிறகு சுவாமி சுந்தரரைப் பார்த்து திருவாய் மலர்ந்த விதம் எப்படி யென்றால் :—

73.

விருத்தம்.

எல்லவரும் அஞ்சவரும் விறல்மிண்ட அன்பர்
இருந்ததொன்றும் அறியாமல் ஏமாறி நீயே
வல்லமைகொண் டாசாரம் இல்லாமல் இங்கே
வந்தனைகண் டவர்துரத்தி வந்தவனை விலக்கிச்
சொல்லுமெம் மொழியதனைச் சகியாமற் போனார்
சுந்தரா அவர்கோபம் அகன்றிங்கு வாவே
தில்லைவா ழந்தணர்தம் அடியனென முன்னே
திருத்தொண்டத் தொகையெடுத்துச் செப்புவாய் நீயே.

வசனம்.

இப்படியாக சுவாமி சொல்லத் திருத்தொண்டத் தொகை பாடித் திருவாரூரிலே தானே பரவை நாச்சியாருடனே கூடி யிருந்து விளையாடி வருகிற நாளையிலே நடக்கிற விதம் எப்படி யென்றால் :—

---

* வெலி = நீக்கல்.

74.

திபதை.

* குண்டையூர் ஆரூர்க் கொற்றவ னருளால்
குண்டையூர் நெல்லோர் குன்றமெற் கொண்
வளவனூர் தமது மந்திரி கோட் புலியார்
தளபதி நாட்டியத் தான்குடி நண்ணி
மற்றவ ருதவு மகளிரோ ரிருவர்
பொற்றொடி யாரைப் புணராது விடுத்து
பொன்னி னுடைகளும் பூஷண வகையும்
பின்னுமெப் பொருளும் பெற்றுவந் தருளி
பங்குனி விழாவிற் பரவையா ரவர்க்குஞ்
செங்கையா லனவே தியாகமே தருக
தென்புக லூரில் சிவன் செங்கல் தன்னை
அன்புடன் செம்பொன் ஆக்கியே தருக
கொண்டுவந் தருளி கொங்குநா டளவாய்
அண்டர்தம் பதிக ளனைத்தையும் பரவித்
திருமுது குன்றிற் சென்றுதம் பெருமான்
அருளிய பன்னீ ராயிரம் பொன்னும்
மற்றா னருளால் மணிமுத்த நதியில்
முற்றுமே விடுத்து முதல்வர் ஆரூரிற்
குளத்திலே யெடுத்துக் கொண்டுவந் தருளி
உளத்திலே பரவை யுகந்திட விருந்து
மற்றுமே வடக்கா வருகின்ற நாளில்
கொற்றவெம் பெருமாள் குருகாவூ ரருகில்
வந்துபந் தரின்கீழ் மறையவ னாகி
புந்தியே மகிழ்வாய் பொதிசோறும் நீரும்
தந்திடப் புசித்துத் தாங்கழுக் குன்றில்

* குண்டை = எருது.

வந்தன ரருகில் வாழுங்கச் சூரில்
மேவிய போதில் விமலர்அந் தணராய்
தாவியோ டொன்றைத் தன்கையி லேந்தி
இரந்துவந் தன்னம் இடவுமே புசித்து
பரந்தசீர் மகிழ்வாய்ப் பதியெலாம் பரவி
வெற்றியார் தலத்தார் வியந்தெதிர் கொள்ள
ஒற்றியூர் தன்னில் உகந்துவந் தனரே.

சங்கிலி நாச்சியார் திருக்கலியாணம்.

75.

விருத்தம்.

வந்துகோ புரத்தின் முன்னே வணங்கின ரெழுந்து சென்று
சிந்தையின் மகிழ்வு கூரத் திவ்யசந் நிதியி லெய்தி
புந்தியி லுன்னிக் காயம் புளகிக்கக் கண்ணீர் வாரப்
பைந்தமிழ் மாலை பாடிப் பணிந்துவந் தனரோர் பாங்கே.

வசனம்.

இப்படியாக சுந்தரர் சுவாமியை சேவித்துப் பிறகு திருச்சுற்றிலே *திருப்பணி செய்யும் அடியார்களைத் துதி பண்ணிக் கொண்டு வருகிற விதம் எப்படி யென்றால் .—

76.

சம்பை.

திருவலகு மெழுகுவீர் திருப்பணியும் திருமெழுக்கும்
செய்வீர்க ளுமைப்போற்றி உய்குவே னையா !
தூபமகிற் புகைசெய்து தீபவொளி செய்கின்ற
தொண்டர்கா ளுமைப்போற்றித் தெண்டன்கா ணையா !

---

* 'தொண்டு செய்வார் திருக்கதொழில்கள் கண்டு தொழுது செல்கின்றார்.'—வயர்கோன் - ௨௨௫.

சந்தனமும் புனுகுசட்டம் தைலமுதற் செய்தமைத்து
தருகுவீ ருமையெல்லாம் தொழுகுவே னையா !
பலமலரும் வில்வமுதல் பறித்துவந்து மாலைசெய்து
பணிசெய்வீ ருமக்கெல்லாம் பணிசெய்வே னையா !

வசனம்.

இப்படியாகப் பார்த்து சேவித்து வருகிறபோது மாலை மண்டபத்திலே சங்கிலி நாச்சியார் மாலை தொடுத்துக் கொண்டிருக்கிற விதம் எப்படி என்றால் :—

77.

சம்பை.

பண்பான ருத்ராக்ஷ பசும்பொன்கண் டிகைதன்னை
கண்வாளிப் புருவாளி காதுதனைப் புனைந்து
கெம்புமுக் குத்தியிட்டு கீல்கண்டு மயிர்முடித்து
செம்பொனு கியமெய்யில் திருநீறு பூசி
அக்குமணி முத்துமணி அணிபவள மணிவடமும்
ஒக்கவே முலைமீதில் ஊசலிங்க ாட
பட்டுடையு மெத்தாப்பும் பாடகமும் பரிபுரமும்
கட்டழகும் வீசுசெம்பொன் கடகவளை யொளிர
அருவமதன் கருப்புவில்லின் அலர்வாளி தனைத்தொடுக்க
புருவவில்லின் மைக்கண்பூ வாளிதனைத் தொடுத்து
*நெஞ்சுதனி லஞ்செழுத்தை நெகிழாம லேதொடுத்து
வஞ்சிசங் கிலிகையில் மாலைதொடுத் தனளே.

வசனம்.

இப்படியாக இருந்த சங்கிலியாரைப் பார்த்து சுந்தரர் தம்முடைய மனதுடனே சொல்லுகிற விதம் எப்படி என்றால் :—

* 'அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்தே'— ஏயர்கோன்-உஉச.

78.

திரு.

மாசு சூழ் சந்திர னென்ன வே—திறை
மறைவி லிருந்தவ ளிவ ளாரோ!
அலரோன் றெடுத்திவள் தொடுக்கவே
மலர்ந் தெடுத்தே மதன் தொடுக்கிறான்!
தொடுக்கவே மல ரெல்லாம் மனந்
திடுக்குத் திடுக்கென லாகுதே!
பாவையல்லா இல்லை யெனு மெனக்
கான திருவரு ளென்ன வந்ததே!

வசனம்.

சங்கிலியார் சுந்தரரைப் பார்த்துத் தன் மனதுடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

79.

குறுந்தாழிசை.

இதுவரைக்கும் ஒருவருக்கும் இடங்கொடா என்மனதில்
புதியரிவ ரார்வந்து புக்கினரோ தூக்கோ?
பண்டு சொன்ன சொற்படிக்கு பரமரிவ ரைத்தனியே
கொண்டுவந்து விட்டுக் குலுக்காட்டஞ் செய்தனரோ!
ஏதொன்றும் நானறியேன் இடைத்துகிலும் நெகிழுதுகாண்
சூதொன்று முலைபசலை சூழ்ந்துவளை கழலுதுகாண்!
குளிர்ந்த தென்றல் தீயாய்க் கொதித்துவரு மல்லாமல்
தெளிந்தமன மும்மயலிற் சிக்கினதென் செய்வேனே!

வசனம்.

அந்த சமையத்திலே சுந்தரர் இவளாரென்று கேட்க விப்பிர வக்ரன் விசாரித்து வந்து சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

80.

விருத்தம்.

நாயிறெனும் நகரில்மா பாலன் நாயிறுகிழவன் நல்கும் பாவை
மாயவிழிச் சங்கிலியார் தன்குலத்தி லொருவரையும் வரையே
னென்று
மேயசிவன் கருணையினாற் கன்னிமா டத்தில்வைகி மின்னார் சூழ
வயதிருச் சந்நிதியில் திருப்பணிகள் செய்துதொழு திருக்கின்றாளே.

வசனம்.

அந்த விசேஷங் கேட்டு சுந்தரர் ஒரு இடத்திலிருந்து கொண்டு விரக தாபம் படுகிற விதம் எப்படி யென்றால் :—

81.

அட்டதாளம்.

அந்தச் சங்கிலி யாட்டச் சங்கிலி ஆசைபூட்டிய மனதினை
பந்தித தேயிழுக் கின்ற சங்கிலிப் பாவை யாளுள்.
ஏது செய்குவன் மையற் சங்கிலி யிரண்டு தாளையு மப்புறம்
போதி டாமலே யிருப்புச சங்கிலி போல தாச்சு.
ஐயை யோவெகு சங்கிலித் துறடானபடி யேமயங்கினன்
மெய்யிலே மந்த மாருதத் தழல் வீச லாலே.

வசனம்.

பின்னையும் எழுந்திருந்து சந்நிதியிலே போய் சுவாமி யுடனே விண்ணப்பம் பண்ணிக் கொள்ளுகிற விதம் எப்படி யென்றால் :—

82.

விருத்தம்.

பரவை மின்னாள் தருமாசைப பரவையதில் மூழ்கியது
பற்று தென்றோ
பொரவலகண் சங்கிலியார் காதலின்சங் கிலிச்சிக்குப்போட்டாளையா
பரசிவனே மயல்கொண்ட பரிதாபந் தனைப்பார்த்துப்
பாவை யாரைத்
தரவேணு மினியுனது பாதார விந்தமதிற் சரண்செய் வேனே.

வசனம்.

இப்படியாகச் சுந்தரர் சொல்ல சுவாமி திருவுளம் பற்றிப் பழைய விருத்தப் பிராமணர் போல் வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

83.

விருத்தம்.

வருந்திட வேண்டாங் கேளாய் வன்றொண்ட அவளைச் சேர்தல்
அருந்தவ மானு லுந்தான் ஆயிரம் நயங்கள் பேசித்
திருந்தவே செய்து நாளைத் திருமணஞ் செய்விப் பேன்காண்
இருந்தல்லோ படுக்க வேணும் இனிக்கணந் தாளு வாயே.

வசனம்.

அந்த சமையத்திலே இராத்திரி வருகிற விதம் எப்படி யென்றால் :—

84.

திபதை.

இப்படிச் சொல்லி யெங்கள் ஈசனும் மறைந்து போக
அப்படித் தானே யந்த ஆதவன் தானும் போக

நாயகன் போனு னென்று நளினங்கள் கதவடைக்க
மேயவே குமுத மெல்லாம் வீடுகள் திறந்து கொள்ள

மாலையம் பொழுது மாயச் செவ்வானம் மேற்கே தோன்ற
வேலையி லிடம்வி டாமல் விளங்குசெம் பதும மென்ன

பாவிய இருளி லெங்கும் பலபல தீபந் தோன்ற
கூவிகள் சோடு சோடாய்க் கூண்டினி லடைந்து வாழச்

சுந்தரர் தனியுந் தாமும் தொலைவிலாக் கங்குல் தன்னில்
தந்திர மதன னேடே சண்டைகொண் டலைந்து நிற்கச்

சங்கிலி யென்ற நங்கை தனித்திர வென்றே போதும்
மங்கையைத் தூறித் தூறி வைதுகொண் டிருக்கும் போது
நித்திரை யென்னும் நங்கை நினைவினிற் கருணை கூர்ந்து
பத்திர விழியிற் பாயப் படுத்தனள் பாயல் மீதே.

வசனம்.

அந்த சமையத்திலே சங்கிலியார் சொப்பனத்தில் சுவாமி வந்து சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

85.

விருத்தம்.

முந்தவே உனக்கு நாமும் மொழிந்த சொற் படியே யந்தச்
சுந்தரன் வந்தா னுன்னைச் சுயமதாய் மனைவி யாகத்
தந்திட வேணு மென்றான் தந்தனம் நாமே பெண்ணே
சிந்தையில் மகிழ்வு கூரத் திருமணம் புரிகு வாயே.

வசனம்.

இப்படியாகச் சுவாமி சொல்லக் கேட்டுச் சங்கிலியார் சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

86.

விருத்தம்.

சென்னிமிசைப் பிறையணிந்த நாதா! வுன்றன்
திருவுளத்துக் கிசைந்தபடி யல்லால் வேறே
என்னிடஇச் சையு முளதோ ஆனா லுந்தான்
ஈங்கிவர்தாம் என்னைவிடுத் தகன்று போந்து
பொன்னுலவு திருவாரூர்ப் பாவை யாரைப்
புணர்வதற்குப் போகேனென் றுண்மை யாகச்
சன்னிதிமுன் வந்துநின்று சொன்னா ராகிற்
சம்மதியா மனமெனக்குத் தரிக்குந் தானே.

வசனம்.

அப்போது இப்படியாகச் சங்கிலியார் சொன்ன வார்த்தை யைக் கேட்டு பழைய விருத்தப் பிராமணர் போலே வந்து சுந்தர ருடனே சுவாமி சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

87.

திரிபுடை.

சுந்தரா! எந்தன் தோழ னேயெனைத்
தூதனுப்பினை யெய்தி நானுமே
அந்த மாதை யிரந்து ப்ரீதியோ
டனேகஞ் சொல்லி
மனது சம்மதி யாக வேசெய்த
வருத்தம் எத்தனை யென்று சொல்வேன்
அனக னேயவள் சொன்ன வாய்மொழி
யதனைக் கேளாய்;
என்னை விட்டினிப் பாவை யார்பக்கல்
ஏகிலே னெனக் கோயிற் சந்நிதி
தன்னில் நின்றுனைச் சொல்லச் சொல்லினள்
சதுரியவளே.

வசனம்.

இப்படியாகச் சுவாமி சொன்னது கேட்டு சுந்தரர் சொல்லு கிற விதம் எப்படி யென்றால் :—

88.

* அர்த்த சந்திரிகை.

நெஞ்சுதனை மாலையுடனே கொண்டு பிணித்தாள்
பிணித்த வுடனே காமப் பிரமை யாகச் செய்தாள்
செய்யு மவள் என்சொலினுஞ் செய்யவே வேணும்
வேணுமென்று சந்நிதி முன் விளம்பியிடும் போது

* இச் செய்யுளில் அந்தாதித் தொடையைக் கவனிக்கவும்.

போதவே கோயில்தனில் பொருந்தியங் கிராதே
மகிழனடி யுறை வைகி நீயே.

வசனம்.

இப்படியாகச் சுந்தரர் சொன்ன வுடனே அப்படி தானே செய்கிறேனென்று சங்கிலியார் சொப்பனத்திலே திரும்பியும் வந்து சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

89.

விருத்தம்.

சங்கிலி யாரே நீதான் சாற்றிய வசன மெல்லாம்
அங்கவ னிசையச் சொன்னேன் அவன் சம்மதிக்கும்போது
தங்கியே கோயில் விட்டுத் தருமகி ழடியின் கீழே
இங்கிதத் திருப்பா யென்றான் இவையறிந் திருப்பாய் நீயே.

வசனம்.

இப்படியாகச் சங்கிலியார் சொப்பனங்கண் டெழுந்திருந்து பாங்கியை யெழுப்பிச் சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

90.

தரு.

தோழியாரே நானிப்போது சொப்பனங்கண் டதுகேளாய்
ஆழியானும் அயனுங்காணு அத்தனார்வந் தனர்கண்டாய்
வந்துநின்று தமதுதோழன் வருந்தியென்னை வேணுமென்ன
தந்தமையி ரக்கத்தாமுஞ் சம்மதியாய்த் தருவோமென்றே
சொன்னதிந்தப் படிதானுந்தன் சுயத்தியே தென்று கேட்க
என்னிச்சையோ சாமியுந்தன் இதயப்படி யென்று சொல்லி
இன்னமுமொன் றுண்டெனைவிட் டாரூருக்கு ஏகேனென்று
சன்னிதிமுன் வந்துசொன்னால் சம்மதியா மென்று சொன்னேன்
சொன்னபொழு தந்தப் பேச்சை சொல்லியவர் சொன்னபேச்சை
என்னருகில் மீண்டும்வந்து எனக்குச் சொல்லுந் தாங்கேளாய் !

சம்மதியா யதனுக்கவர் சபதஞ் சொல்லும் வேளையிலே
தம்மைவந்து மகிழுடிக்கே தனித்திருக்கச் சொல்லினராம்
இந்தஅந்த ரங்கப்பேச்சும் எனக்குரைத்தார் என்மேலுள்ள
எந்தனீசன் கருணை தன்னை என்னென்றுநான் சொல்லுவேனே!

வசனம்.

தோழி அந்த வசனத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டுச் சங்கிலி யாருடனே சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

91.

சம்பை.

வந்துமுன் புத்தூரில் வலியஆட் கொண்டதொண்டன்
தன்தொழும்பன் தனக்கின்று சந்துநடந் துன்னை
யிணைக்கயிரு கால்கனவில் எழுந்தருளி வந்த அந்த
கணக்கதனை என்னாலே கணக்கிடுக வசமோ?
அதுதானும் போகட்டும் அவர்சொன்ன மொழியை வந்து
இதுதானென் றுனக்குரைத்த இயல்பையென்ன சொல்வேன்?
கர்த்தர்திரு விளையாட்டைக் கடையான நாயேன்
எத்தனையென் றாச்சரியம் இயம்புவேன் பெண்ணே.

வசனம்.

இப்படி ஆச்சரியப்பட்டு இருக்கிற வேளையிலே விடியற்காலம் வந்து தோழிமாரும் சங்கிலியாரும் புஷ்பங்கொய்து வரப் போகிற போது சந்நிதிக் கெதிராகச் சுந்தரர் வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

92.

பதம்.

போகாதேநீ நில்லடி பெண்ணே—ஒரு
புத்தி யிதெனச் சொல்லடி.
தோகாய்நீ யிப்போது சுவாமியா ருடன்சொன்ன
வாகான சொற்படி வந்துநான் சொல்வேன்காண். (போ)

ஏது நீதய வில்லையோ பெண்ணே—மயல்
இருவர்க்குஞ் சரி யல்லவோ.
காதாருங் கூர்விழிக் கணையையென் மேல்விட்டு
வாதாடி யென்னை வருத்திட வேண்டாங் காண். (போ)

சந்நிதி யிது தாண்டி பெண்ணே
சொல்லுஞ் சபதம் சொல்லுவேண்டி.
மன்னெனச் செய்தென்னை மயல்தீரச் செய்தாலுன்
பின்னே திரிந்து பிழைக்கிறேன் பெண்மானே. (போ)

வசனம்.

இப்படியாகச் சுந்தரர் குறை யிரந்து சொல்லுகிறபோது சங்கிலியார் நாணம் வந்து தோழிமார் கூட்டத்திற் புகுந்து ஒதுங்கிப் போகையில் சுந்தரருடனே தலையான தோழி சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

93.

ஓட தரு.

நீர்திருவாய் மலர்ந்ததெல்லாம் *நிபத்தியிந்த நேரத்திலே
சீர்திருவாய்க் கோயில்தனைத் திறந்திருக்க வில்லையன்றோ
ஆதலினால் சாமியெங்கும் அமர்ந்திருப்பா ரெனவெண்ணி
சீதமலர் மகிழ்மரத்தின் திருமுன்பு சொல்வீரே.

வசனம்.

இப்படியாகத் தோழி சொன்ன வசனத்தைக் கேட்டு அப்படியே சுந்தரர் நல்லதென்று மகிழமரத்தின் கீழே வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

* நிபத்தி=உண்மை.

94.

விருத்தம்.

மகிழடி முக்கால் வந்து வலஞ்செய்து பணிந்து சிந்தை
நெகிழவே சாமி யாரை நினைந்துநெக் குருகிக் கையை
முகிழ்செய்தே இனி ஆரூரை முகங்கொண்டு செல்லே னென்னப்
புகழ்பெறச் சொன்னேன் ஐந்து பூதமுஞ் சாக்ஷி தானே.

வசனம்.

இப்படியாகச் சுந்தரர் சபதஞ் சொன்ன பிறகு சங்கிலியாரும் தோழிமாரும் எப்போதும் போலே புஷ்பம் எடுத்துவந்த பின்பு ராத்திரியே சுவாமி தலத்தார் சொப்பனத்திலே சொன்னபடிக்கு தலத்தார் இருவருக்குக் கலியாணம் பண்ணுகிற விதம் எப்படி யென்றால் :—

95.

விருத்தம்.

சந்நிதி திருமுன் பாகச் சங்கிலி தன்னை நாவல்
மன்னனைப் பீட மேற்றி மறைச்சடங் கெல்லாஞ் செய்து
பொன்னுல கினிற்பூ மாரி பொழிந்திட மேளம் பொங்க
சின்னமார்ப் பரிக்கத் தெய்வத் திருமணஞ் செய்வித் தாரே.

வசனம்.

இப்படிக் கலியாணமான பிறகு நடக்கிற விதம் எப்படி யென்றால் :—

96.

தரு.

(1) கலவைச் சாந்து பூசிநிலாக் காயத் தென்றல் காற்றுவீச
சலவைப் பந்தல் தன்னில்வந்து சம்பாச சல் லாபஞ்செய்வார் ;

(2) கூடமதில் நின்றுகிள்ளை கொஞ்ச முத்துமொழி கேட்பாள்
மாடமேறிப் பூவணைமேல் மதனகேளி கூடி வாழ்வார் ;

(3) உத்தியான வனமலரை யொரு வேளையிற் கொய்து வந்து
தெற்றி தெற்றி மாலைசெய்து சிவன்பதத்திற் சாத்து விப்பார்;
(4) ஒருவேளையிற் சூதாடுவார் ஒருவேளையி லிசை பாடுவார்
ஒருவேளையிற் பூஷணங்கள் ஒருவர்க் கொருவர் புனைவார்கள்;
(5) பிணங்குவார்கள் வணங்குவார்கள் பின்னையுமே
இணங்குவார்கள்
கணந்தனினும் இடை விடாமல் கலந்து விளையாடு வாரே.

97.

விருத்தம்.

* ஆயதோர் கூடல் தன்னில் அநேகநாள் நிமிஷ மாகி
நேயமாய் ஊடல் தன்னில் நிமிஷமோ ரூழி யாகி
† காயங் கண் மூக்கு நாக்கு காதினுட் புலன்க ளைந்து
மேயவே மகிழ்வு கூர இன்பங்கொண் டிருக்கின் றாரே.

வசனம்.

இப்படியாகச் சங்கிலியாரும் சுந்தாரும் போக போக்கியம் அநுபவித்துக் கொண்டு இருக்கிற நாளிலே, ஒருநாள் திருவாரூரை நினைந்து போகவேணு மென்று நினைந்து சுவாமியைச் சேவித்து தனியே புறப்பட்டுப் போகச்சே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

98.

பதம்.

(1) காண்ப தென்றுகாண்—ஆரூரைக்—காண்ப தென்றுகாண்.
காண்ப தென்றினித் தீர்த்த கம லாலயத்தையும்
பூண்பெரு மாத்திடப் 'பூங்கோயில்' தன்னையும் (காண்)

* "புலவி புணர்ச்சிக்கண் ஊழியா மொருகணந்தா
னவ்வூழி யொருகணமாம்" —வயர்கோன்–268.
† "தூநலத்தைக் கண்டுகேட் டுண்டுயிர்த்துற்
றமர்ந்திருந்தார் காதலினால்" —ஷை–267.

(2) பார்ப்ப தென்றுகாண்—ஆரூரைப்—பார்ப்ப தென்றுகாண்.
பார்ப்ப தென்றினித் தேரும் பங்குனித் திருநாளும்
ஆர்ப்பதோர்மேளமும் அலங்காரம்அனைத்தையும் (பார்)

வசனம்.

இப்படி நினைந்துகொண்டு தனியே புறப்பட்டுப் போகையில் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டினவுடனே கண் தெரியாமல் போய் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

99.

ஆகிரி.

(1) சிவசிவா ஏதுசெய்வேன் தீவினையேன் கண்ணொளியை
அவமாகி யோர்*படலத்தால்மறைத்த தென்னவோ !

(2) ஆயிரம்பொய் சொல்லியொரு ஆயிழையை மணம்புணர்தல்
ஞாயமென நானிலத்தில் நவில்வதுவும் பொய்யோகாண் !

(3) ஆதலினாற் சங்கிலிக்கா அறைந்த பொய்யைச் சகியாது
நீதியல்ல அடியேனை நேசம்வைத்துக் காத்திடையா !

(4) பேணியுனக் கஞ்சாப் பிழைசெய்தே னாகிலுங்கைக்
கூனுகோ லானாலும் உதவய்யா இப்பொழுதே !

வசனம்.

இப்படியாகப் புலம்பிக்கொண்டு காலாலே வழி தடவிக் கொண்டு போகிறபோது சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

100.

ஓடதரு.

அந்தகற்கந் தகரிடத்தில் பிழைசெய்தந் தகனானேன்
வந்திடுவீர் போயிடுவீர் வழிகாட்டீர் வழிகாட்டீர் !
குருடனென லாய்க்கையிற் கோலுமின்றித் தனியானேன்
வருகின்றீர் போகின்றீர் வழிகாட்டீர் வழிகாட்டீர் :

---

* "படலமென் கண் மறைப் பித்தாய்"
—சுந்தரர் தேவாரம் – திருவெண்பாக்கம்.

101.

விருத்தம்

இப்படி யாக ஏகி யிரங்கியே தளர்ந்து சென்று
மைப்படி கண்டார் முல்லை வாயிலைப் பணிந்து போற்றி
மெய்ப்படி வெண்பாக் கத்து விமலனு ரிரங்கித் தந்த
கைப்பிடி யூன்று கோலுங் கைக்கொண்டு நடக்கின் றாரே.

வசனம்

இப்படியாக வரச்சே பரிசனங்களெல்லாம் வந்து கூடி அப்பால் போகிற விதம் எப்படி யென்றால் :—

102.

திபதை.

பழையனூர் பணிந்து பனிச்சடை யார்தந்
தழைதிரு ஆறல் தன்னையும் பரவிக்
காஞ்சிமா நகரிற் கம்பர்தம் அருளால்
வாஞ்சையா யிடக்கண் வரப்பெற் றுகந்து
மற்றுள பதியும் வணங்கியே பரவி
வெற்றித் துருத்தியில் மெய்ப்பிணி தீர்ந்து
சிந்தையில் மகிழ்ந்து சிவன்பதம் நினைந்து
அந்தியம் போதில் ஆரூரில் வந்து
புற்றிடங் கொண்ட புநிதரைப் பணிந்து
மற்றொரு கண்ணும் வரமகிழ் வாகி
சந்நிதி விடுத்துத் தனியொரு புறத்தில்
மென்னகை யுடனே வீற்றிருந் தனரே.

வசனம்.

இப்படியாக இருக்கிறபோது பரிசனங்கள் பரவையார் வீட்டுக்குப் போய்த் தன்னுண்டு வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

103.

ஓடதரு.

(1) நீர்வந்த சுபவார்த்தை நின்றெதிரே சொன்னதுமே
கார்வந்த பூங்குழலாள் கண்சிவந்து காய்ந்தெழுந்தாள்!
(2) கல்லுகளுஞ் சில்லிகளும் கட்டிகளும் விட்டெறிந்தாள்
புல்லுமுதலாயெறிந்தாள் புழுதிகளும் விட்டெறிந்தாள்!
(3) தாதிகளை விட்டெம்மைத் தடிகொண்டு மோதுவித்தாள்
ஏதுசெய்வோம் நாங்களிங்கே இழைந்தோடி வந்தோமே.

வசனம்

அப்போது சுந்தரர் அவர்களைக் கையமர்த்தித் தம்மிலே தாம் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

104.

தரு.

சங்கிலிதனை முதலறிந் தேனோ—அவள்
தன்னைநான் வலியப்போய்ப் புணர்ந்தேனோ
ஐயையோ சிவனரு ளென்னவோ—அவர்
ஆட்டின படியெல்லாம ஆடினேன்
எத்தனை யவச்சாட்டுக் குள்ளானேன்—பின்னும்
இவள்திரு மனத்துக்குப் பகையானேன்
இரண்டு பெண்டுள்ளவர் மனதிலே—நெருப்பு
இருக்குமென்ப துண்மை யாச்சுதே.

வசனம்.

இப்படியாகச் சொல்லிப் பெரியவர்களைத் தூதுக்கு விடுத்து அனுப்புகிறபோது சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

105.

தரு.

பெரியோர்கள் நீங்கள்போங்கள் பேசி மெள்ளச்
சொல்லொணாதே
பிரியமெல்லாம் சொல்லியந்தப் பேதைதனை
யிணங்கப் பாரீர் ;

சந்துசொல்லும் போதுகிட்டத் தையல்க
ளார்ப் பரிக்க
சிந்தைமகிழ்ந் திருக்கப்பார்த்துச் செப்பிமெள்ள
இணங்கப் பாரீர ;
அடுத்தபொன்னி றுடைமாடை யருகிருக்கு
மாதர்க் கெல்லாம்
கொடுத்துள்ளாக்கி யவர்கள்தம்மைக் கொண்டேனும்
இணங்கப் பாரீர் ;
சுத்திவிழிச் சங்கிலியைக் கருத்திலினி
நினையே னென
சத்தியஞ்செய் திருந்தானுலுந் தையல்தனை
யிணங்கப் பாரீர்.

வசனம்

இப்படியாகச் சொல்லி பெரியவர்களைத் தூது விடுத்து தம்மிலே தாமிருந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றல் :—

106.

பதம்.

(1) இன்னம் வரவில்லை தூதுக்குப் போனவர்
ஏது செய்வேன் மனமே—அவர்
முன்னமே போயினர் இன்னேரம் வாசல்
முகப்பினுக் கெய்துவரோ ?

(2) வாசல் தலைப்பினில் போம்போது தாதிகள்
வரவேண் டாமெனச் சொல்வரோ—இவர்
பூசுர ரென்ன விடுத்தானு மப்பாலே
போய்ப் பெண்ணைக் கண்டனரோ !

(3) கண்டானு மிவர்தம்மை யந்தமின் னுள்கடைக்
கண்ணாலும் பார்க்கிலளோ !—பின்னும்
பண்டாசை யென்மீதி லெண்ணித் தயவினல்
பற்றுந்தான் பேசுவளோ !

(4) பெரியவ ரிவரென இரக்கத்தி ஞெலொரு
பேச்சுத்தான் சொல்லுவளோ—இந்தக்
கரியபூங் குழல்மாது முனியுமோ மகிழுமோ
கருத்தென்னமா யானதோ.

வசனம்

இப்படியாகச் சுந்தரர் தம்மிலே தாம் சொல்லிக்கொண்டிருக்கிறபோது பெரியவர்கள் போய்ப் பரவையாருடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

107.

விருத்தம்.

ஊரனர் தமக்கு மானே னுனக்குமோ ருயிராச் சல்லோ
ஈருட லான தென்றென் றிரங்குவ தறிகி லாயோ ?
மாரனுக் கெளிமை யாக மனமுனி வெய்த லாமோ ?
பாரினி லுன்னைப் போலும் பத்தினிக் கிது தகாதே.

வசனம்

இப்படியாகச் சொன்ன வசனங் கேட்டு பரவை நாச்சியார் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

108.

பதம்.

(1) இது என்ன சொல்லுகின்றீர் இந்தச் சென்மந்தனில்
இனி முகம் பார்ப்பதுளதோ ?
அதுவுமொரு யுகம்வேறே ஜென்மங்க ளாச்சுதினி
அவாரோ நானோ காண்.

(2) வருவரென எப்பொழுதும் வழிபார்த்து பார்த்துத்
தெரு வாசலிலே குடியாகியே
உருகியில வெறிநெருப்பு ராத்திரிக ளொத்தனைகளோ
கழித்தனன் ஐயகோ.

(3) குறிக ளெத்தனை சகுனமான தெத்தனைமன்ற
கூடலெத்தனை பார்த்துமே
யெறிமழைப் பருவமும் இளவேனிலுங் கடந்
தெரிகிறது சொல்ல வசமோ!

(4) பாவை யெனைப் பண்ணுமற் சங்கிலி யார்க்குப்
பாவைச் சங்கிலி சிக்கிலே
யிரவுபகற் சிக்கினர் என்றநாள் முதல்மனத்
திருப்புச் சங்கிலி யிட்டனள்!
—இது என்ன சொல்லுகின்றீர்!

109.

வெண்பா.

இத்திறங்காண் சான்றோரே யின்னமுநீர் பேசினச்கால்
மெய்த்திறத்தா லாவி விடுவேன்காண்—அத்திறத்தால்
மாறுமெ லென்னை மனச்சிலுக்குப் பண்ணியொன்றுங்
கூறுமலே செல்லுங் கோள்.

வசனம்

பெரியோர்கள் பயனின்றித் திரும்பி வந்ததை அறிந்த சுந்தரர் சுவாமியை வணங்கிப் பின்னையும் சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

110.

திரிபங்குலு.

சுத்த மானவர் தாமும் நீரே—என்றன்
தோழ ரானவர் தாமும் நீரே.
ஆனபடியா லொன்று மும்மையே
ஆதரிப்பா ரெவர்கள் எம்மையே.
இன்று பாவையைக் கூட்டி நீரே—என்றன்
இருதய வன்துயர் நீக்கு வீரே.

வசனம்

இப்படியாகச் சுந்தரர் பரிதாபப் படுகிறபோது சுவாமி வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

111.

விருத்தம்

ஆருயிர்த் தோழா நீயே யாசைகொண் டலைந்து மாரன்
போருயிர் வாளி பட்டுப் புலம்பிட வேண்டாம் கண்டாய்
வாருயிர்ச் சிலையி னாளை வருந்தியே முனிவு நீக்கிச்
சீருயிர் மகிழ்வாய் நின்னைச் சேரநாம் செய்கு வோமே.

வசனம்.

இப்படியாகச் சுந்தரருடனே சொல்லிப் பின்பு பூஜை பண்ணுகிற குருக்கள்போல வடிவெடுத்துப் பரவை வீட்டுக்குப் போகிற விதம் எப்படி என்றால் :—

112.

தரு.

காய மெல்லாம் நீறு பூசி
காஷாய வேஷ்டி தானும் போர்த்து
தூய ருத்தி ராக்ஷ மார்பு
துவளு முன் னூலிலங்கக்
காதினிற் பொற் குழையு மின்ன
கனமாகிப் பரவை வாழும்
கோதிலா மனைக்குப் பூஜைக்
குருக்களும் போகின் றாரே.

வசனம்.

இப்படியாகப் போய் பரவையார் வாசலிலே கடை திறப்புச் சொல்லுகிற விதம் எப்படி யென்றால் :—

113.

குறுந்தாழிசை.

(i) அரவா பரணன் திருத்தோழன்
ஆசைத் துணைவி யெனவந்தாய்
பரவாய் பரவாய் ஓகோகோ
பைம்பொற் கபாடந் திறமினோ !

(ii) கரவா மனத்தா ராரூரர்
காதற் கன்னி யென்னுந் தாய்
பரவாய் பரவாய் ஓகோகோ !
பைம்பொற் கபாடந் திறமினோ !

வசனம்

இப்படியாக அழைத்தபோது பரவை நாச்சியார் தாமே யோடிவந்து கதவு திறந்து எதிர்கொண் டழைத்துப் போய்ப் பொற் பீடத்தின் மேலே எழுந்தருளப் பண்ணி ஒழுக்கத்துடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

114.

ஓடீ தரு.

(i) அங்குநீ ரெழுந்தருளி யபூர்வமா யிரவுதன்னில்
இங்குவந்த காரியத்தை யியம்புவீர் இயம்புவீரே.

(ii) பாதியிர வாகியெங்கும் பனிமுடங்க லானபின்பு
நீதியோகாண் நீர்வருகை நிகழ்த்துவீர் நிகழ்த்துவீரே.

வசனம்.

அந்த வசனங் கேட்டுக் குருக்கள் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

115.

தரு.

(i) அனமிசைந்த நடையாரே ஆரூரர் துணைவியரே
மனமிசைந்து கொள்வாயேல் மனுவொன்று சொல்லுவேன்

(ii) சொல்லாத பேச்சல்ல சுபமுனக்கா கியபேச்சே
நல்லாய்நீ தள்ளாமல் நம் மனுவைக் கேட்பாயே.

வசனம்

பாவை சொல்லுகிற வசனம் எப்படி என்றால் :—

116.

தரு.

(i) செம்மைபெறு மெய்ஞ்ஞான சிவகுருவே யென்மனது
சம்மதியாம் மொழிசொன்னால் தள்ளாமற் கேட்பேனே.

(ii) மைவிழியாள் சங்கிலிதன் மகிழ்மணமிட பேச்சொழிய
செய்வதெந்தப் பேச்செனினுஞ் சிரசுகொண்டு செய்வேனே.

வசனம்.

குருக்கள் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

117, 118.

விருத்தம்.

சங்கிலி மகிண னென்றே சங்கிலிச் சிக்குப் போட்டாய்
அங்கவர் பொறுக்க மாட்டார் அவர்தமக் காகி யன்றோ
கங்குலிற் பாதி நேரங் கருக்கலில் வருந்தி வந்தோம்
இங்கிவை மறுக்க வேண்டாம் இன்னமுஞ் சொல்கு வேனே.

பத்தினி யானோர் தங்கள் பதியெந்தப் படிசெய் தாலும்
சித்தம திசைவ ரல்லாற் சீறுவா ருலகி லுண்டோ
நித்தனார் தோழர் தம்மை நேரிழை யாத லாலே
குத்திர மொழிபே சாமற் கூடுதற் கிசைகு வாயே.

வசனம்.

அந்த வசனங் கேட்டுப் பாவை சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

119.

திரிபுடை.

(i) நன்று நன்றுநீர் சொன்ன வாய்மொழி
நாயனுரையும் ஒருபுறம்பென
அன்றுதான் விறல் மிண்டர்சொல் மொழி அறிகிலீரோ!*

(ii) ஆதலாலெவ ரானபோதினும் அக்ரமஞ்செயில்
பொறுக்கவே யொரு
நீதியோ சொலும் என்ன வார்த்தையை
நிகழ்த்தினீர் காண்!

(iii) இந்த வார்த்தையை நீரல்லாதுமற் றெவர்கள்
சொல்லினும் பொறுக்கிலேனினி
வந்து நேரம தாச்சுப்போ முங்கள் மனைக்குத் தானே!

வசனம்.

இப்படியாகப் பரவை நாச்சியார் சம்மதியாமல் சொன்ன வசனம் கேட்டுப் பூஜை குருக்கள் திரும்புகிறபோது அங்கே சுந்தரர் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற விதம் எப்படி யென்றால் :—

120.

குறுந்தாழிசை.

(i) கன்னிதனை ஒருபொருளாய்க் கருத்திலெண்ணிக் கங்குல்தனில்
பொன்னடிகள் வருந்திடவே போவாரோ போகிலரோ!

(ii) போவார்காண் என்பொருட்டால் போனாலும் அவள் இவரைத்
தேவராய் மதித்திரக்கஞ் செய்வாளோ செய்கிலளோ!

---

* அந்தாதித் தொடை நோக்குக.

(iii) மதித்திரக்கஞ் செய்து மனமுவந்து சம்மதித்தால்
கதித்த அன்போ டென்மாட்டுக் காண்பதற்கு வருவாரே!

(iv) வருவாரே என்னை வருந்திடவே நினைக்கிலர்காண்
அரிவையவள் தனையிணக்கி அவசியமாய் வருவாரே!

வசனம்.

இப்படி சுந்தரர் சொல்லிக் கொண்டிருக்கிற சமையத்திலே சுவாமி வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

121.

தரு.

(i) நடந்து நடந்து கால்கள் தேய்ந்து
நங்கை யுடனே பேசிப் பேசி
முடிய நாக்கும் வாயும் எல்லாம்
முட்டை போல உலர்ந்த தையா

(ii) வேண்டி வேண்டிக் கைகள் தானும்
மெத்தவுமே நொந்த தையா
ஈண்டி யென்ன செய்கின் றாலும்
இணங்கிலாள் என்செய் வேனே.

122.

விருத்தம்

என்செய்வே னென்றன் தோழா இருந்திருந் தினிது பேசி
மின்செய்த மருங்கு லாளை வேண்டிய படிசொன் னாலும்
முன்செய்த பிழையை யெண்ணி முனிவது நீங்கி டாமல்
தன்செயல் தானென் றுமல் தள்ளினா ளென்னையுந் தானே.

வசனம்.

இப்படி சுவாமி சொல்லக் கேட்டு சுந்தரர் தளர்ச்சி யுட்னே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

123.

பதம்.

ஏது செய்குவேன் சிவனே—நான்—ஏது செய்குவேன்
ஏது செய்கு வேன் இனி எவரைத் தூதேவியே
காதலின் வேலைக் கரை சேர்வேன் ஐயோ !
தூதுன்னை ஏவியுஞ் சொல்லாது சொல்லியும்
மாதுநல் லாளின்னம் வசமாகா விட்டால்
உன்னாலே ஆகா தொருவரா லாகுமோ
என்னாவி பின்னும் இருக்குமோ சொல்லாய். (ஏது)

124.

விருத்தம்.

*வங்கணக் காரா கேளாய் வருந்தி நீ யிருக்க வேண்டாம்
நங்கைநம் பரவை யாரை நயந்தினி திருந்து பேசி
செங்கணு முனிவு நீக்கித் தெரிந்துனைக் கூடல் செய்தே
யிங்கணோர் கணத்தி லெய்தி யிருந்துன்னை யனுப்பு வேனே.

வசனம்

இப்படியாகச் சுந்தரருடனே சொல்லிவிட்டுச் சுவாமி தூதுக்குப் போகிற விதம் எப்படி யென்றால் :—

125.

விருத்தம்.

அப்பொழு தானார் தாமும் அதிசய வடிவ மாகி
மைப்படி கண்டந் தோன்ற மான்மழு கையி லேந்தி
மெய்ப்பிறை கங்கை வைத்த வேணியும் நீறு பூச்சும்
ஒப்பிலா இரவி கோடி ஒளிதர வருகின் றாரே.

* வங்கணன் = உற்ற தோழன்.

126.

தரு.

தூதுக்கு வந்தனர் காண்—சுந்தர ரேவு-
தூதுக்கு வந்தனர் காண்.
தூதுக்கென் றேமணி வீதிக் குளிரவொரு
பாதிக்குள் சுரர் தொழும் ஆதிக்கச் சிவனுர்
துந்துமி வாத்தியம் திமிதிமி திமியென
சந்திரர் ஆதித்தர் பந்தம் பிடிக்க
சுரர்சொரி பூமழை தரைமெயல்லா நிறையவே
வரமுநி வோர்தொழ பரவையார் மனைக்கு- [தூதுக்கு]

வசனம்.

இப்படியாக சுவாமி வரும்போது பரவையார் எதிர் கொண்டு வந்து தோத்திரம் பண்ணுகிற விதம் எப்படி யென்றால்.

127.

பதம்.

சங்கரா ! சதுர் வேத நாத சதாசிவா ! பரமேஸ்வரா !
பொங்கராவணி பூஷணு ! சிவ புங்கவா ! தெய்வ நாயகா !
போற்றி போற்றி

நிர்க்குண நீல கந்தர போற்றி
நிர்மல ரூப நிராமய போற்றி
பார்வதி வல்லப பண்ணவ போற்றி
பாணிற நீறு படிந்தனே போற்றி
தாண்டவ பாத பங்கய போற்றி
சந்த்ர சடாமகு டத்தாய் போற்றி

வசனம்.

இப்படியாகப் போற்றி செய்து பின்னேயும் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

128.

தரு.

என்னையொரு பொருளாக்கிச் சிவனே!
எனக்கிது புத்தியெனச் சொல்லாய் சிவனே!

வசனம்.

இப்படியாகப் பரவையார் சொன்ன விசேஷங் கேட்டு சுவாமி திருவாய் மலர்ந்த விதம் எப்படி யென்றால் :—

129.

விருத்தம்.

அந்தமா யறிய முன்னம் அகிலமும் அறிய நின்பால்
சுந்தரப் பரவை யாரே தூதுவந் தனன்யான் கண்டாய்
இந்திர போக மாக எமதுயிர்த் தோழ னுனை
மந்தர மூலைக ளார மணந்து நீ வாழ்கு வாயே.

வசனம்.

இப்படியாக சுவாமி சொல்லக் கேட்டுப் பரவையார் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

130.

விருத்தம்.

சுந்தரர் தொண்ட னுைத் தொழும்பு நீ யாண்ட வள்ளல்
எந்தனிச் சையுமொன் றுண்டோ எப்படி திருவு ளத்தில்
சிந்தித மாச்சோ அந்தச் செயற்படி செய்வேன் ஐயா
நந்தமை யாளுந் தெய்வ நாயகி பாக னுரே.

வசனம்.

இப்படியாகச் சொன்ன பரவை வார்த்தையைக் கேட்டு வந்து சுவாமி சுந்தரருடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

131.

விருத்தம்.

அன்னநடைப் பரவையரை அடைந்து யாமே
அநேகமா யிருந்துகெஞ்சி முனிவு மாற்றி
நின்னையணைந் திடச் செய்தோம் கண்டா யிப்பால்
நீ ஒன்றுங் கவலற்க நினைவு தோற்றம்
பின்னையொரு குறையுமில்லை மாது கொண்ட
பிணக்கதனைத் தீர்த்துவைத்தோம் பெருமையாலே
மன்னுமுட னுயிரொன்ன மருவி வாழ்வீர்
மாதவர்கள் போற்றிசெய்யும் வண்ணந் தானே.

வசனம்.

இப்படி சுவாமி சொன்ன விசேஷங் கேட்டு சுந்தரர் போய்ப் பரவையுடனே கூடிக் கலவியின் மகிழ்ந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

132.

ஏலப்பதம்.

(1) மெய்ப்படிக்குப் போனுரை வியந்த தோழ னென்பதல்லால்
இப்படி நீ தூது சென்றாயோ—தியாகராயா !
இப்படிநீ தூது சென்றாயோ.

(2) சிந்தனைக் குகந்த பரவை யாரைத் தழுவி யேக போக மாகி
இந்திர போகம் போலிருந்ததே—பரவையுடனே
இந்திரபோகம் போலிருந்ததே.

வசனம்

இப்படியாக சரச சல்லாபத்துடனே யிருக்கிற நாளிலே நடக்கிற சரித்திரம் எப்படி யென்றால் :—

133.

திபதை.

தோகைபா லரனைத் தூதினுக் கனுப்பு
மோகனே யெனது முன்னிலைக் காண்கில்
வடிபெறு வாளால் வகிர்வகி ராகத்
தடிகுவே னென்னச் சபதங்கொண் டிருக்கும்
ஏயர்கோன் கலிக்காமர் என்போரை அவருடன்
நேயமா யிணைக்கும் நினைவுகொண் டரனார்
மிக்க சூலையிலே விரிக்க மற்றதனைத்
தொக்கவே நீக்கித் தோழமை செய்து
அன்புடன் சிவனார் அருளினைப் புகழ்ந்து
தென்பெரு மங்கலத் திருநக ரகன்று
நாகைமா நகரை நணுகியே பரவி
வாகையாய்க் கலையு மாடை பூஷணமும்
மற்றுமெய் பொருளும் வாம்பரி முதலிய
பெற்றுவந் திருந்து பெண்களுக் கரசி
பரவையை மருவி பரமரைப் பணிந்து
விரவுசுந் தரனார் விளங்கு கின்றாரே.

வசனம்.

அந்த சமயத்திலே சேரமான் கழறிற்றறிவார் நாயனார் வருகிற விதம் எப்படி யென்றால் :—

134.

விருத்தம்.

சந்திர வேணி யீசன் தனித்திரு வருளி னாலே
சுந்தரர் தம்மைக் கண்டு தோழமை செய்ய வேண்டி
சிந்துரக் களிறு மாவுஞ் சேனையுஞ் சூழச் சேரர்
இந்திர னென்ன ஆரூர்க் கினிதெழுந் தருளி னாரே.

135.

தரு.

சத்திர சாமரை சூழத்—தமனியக் க்ரீடஞ் சூடி
சித்திர மன்மத னென்ன—சேரமான் வந்தனர் பாரீர்.

வசனம்.

இப்படியாகச் சேரமான் வருகிறபோது சுந்தரர் எதிர்கொண்டு வந்து ஒருவருக் கொருவர் வணங்கி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு சுவாமியைச் சேவிச்சுக்கொண்டு பரவையார் வீட்டுக்கு வந்து இருவரும் சாப்பிட்டுச் சரச சல்லாபமாய்ப் பந்தாடல், ஆட்டுக் கடாப்போர், கோழிப்போர் வேடிக்கைப்பார்க்கிற விதம் எப்படி யென்றால் :—

136.

தரு.

கன்னி மார்முலை கண்டு துள்ளல் போலக்
கலீல் கலீலென கையிற் பந்துகள் எழும்பப் பாரையா !
தோகைமார் குதிகள் கண் டோடல் போலத்
துரீலெனக் கொட்டியா லடிப் பந்து பாரையா !
மதுகயிடவர் பொருதல் போலவே படீல் படீலென
வளர்கடா நின்று பாய்தல் பாரையா !
கறங்குபோற் சுழற் காற்று போலவே சுறீல் சுறீலெனக்
காலினாற் பொரு கோழி பாரையா !

வசனம்.

அந்த சமையத்திலே மல்லர்கள் வருகிற விதம் எப்படி யென்றால் :—

137.

விருத்தம்.

சிங்கநேர் பொருத வல்லோர் செங்கையில் விரலுக் கெல்லாம்
பொங்கமா யிருப்புக் கோதை புனைந்தவர் சாணைக் கத்தி
அங்கையிற் கொண்டு செம்மண் அடங்கலு முடலிற் பூசி
வெங்களி றென்ன மல்லர் வீரர்கள் வருகின் றாரே.

138.

தரு.

சல்லடமு மிட்டுப் பட்டுக் கச்சை விருஞ்சு கையில்
சாணுக் கத்தி கொண்டு மட்டிக் குல்லா தரித்து
வல்லமையாய் மெள்ளென அசைந்து நடந்து ஜெய
மல்லர் வீர ரிஷப மென்ன வந்தனர் பாரீர்.

வசனம்.

இப்படியாக வந்து ஒருவர்க் கொருவர் மல்லு யுத்தம் பண்ணு கிற விதம் எப்படி யென்றால் :—

139.

தரு.

சிறுகாடி முழக்க மென்னவே—குமு குமுவென
சிங்கக் கெர்ச்சனை செய்தல் பாரையா !
கண்டபேரண்டம் சிறகடித்தல் போல்—பளீ பளீ லெனக்
கையினால் தொடை தட்டல் பாரையா !
புலியும் புலியும் எதிர்த்தல் போலவே—கடிகடியென
புஜங்கள் கொட்டிப் பாய்தல் பாரையா !
துதிக்கை யானைகள் வளைத்தல் போலவே—மெள்ள மெள்ளச்
சுழற்றி விடையம் வருத்தல் பாரையா !
உலகில் வரையின் மார் புடைத்தல் போலக்—
கணீல் கணீலென
ஒருவர்க் கொருவர் புடைத்தல் போலவே—வகைவகையாய்
மல்லுப் போரினை செய்தல் பாரையா !

வசனம்

இப்படியாக வேடிக்கை பார்த்துக் கொண்டு வருகிற நாளில் நடக்கிற விதம் எப்படி யென்றால் :—

140.

திபதை.

இருவரும் சிலநாள் இவ்விதம் போல
மருவியே தியாகர் மலர்ப்பதம் வணங்கி
உகந்துடன் திருவா ரூரினை விடுத்து
மிகுந்தசீர் வளவர் விளங்குநா டதனிற்
பரமர்தம் பதிகள் பத்தியாப் பாடி
வரமளித் துதவும் மற்றுபல் றலங்கள்
உற்றன யாவும் உவப்புடன் கண்டு
மற்றுமே திரும்பி வந்துதான் தியாகர்
உகந்துவாழ் திருவா ரூர்தனி லெய்திச்
சுகந்தரு பரவைத் தாவிருந் தளிக்கப்
பின்னுமே சிலநாள் பிரிவிலா திருந்து
மன்னுசே ரலர்கோன் வருந்தியே யழைக்க
மின்னனாள் பரவை விடைதர அகன்று
நண்ணிய மலைய நாட்டினை நோக்கித்
துணையதா யனேகர் சூழ்ந்துவந் தளவில்
இணைவிடா தவர்கள் ஏகிடும் போது
பன்னுகா விரிநீர் பளிங்குமா மலைபோல்
தன்னிலே குடபால் தம்பித்து நிற்க
வடகரை முதலாய் வடிந்தகீழ்த் திசையில்
தடமதா நடந்து தானைகள் தொடரச்
சென்றுதான் வளமைத் திருவையா றதனை
வென்றியாய்ப் பரவி மீண்டுவந் தருளி
கொங்குநா டகன்று குடகு கோளத்தில்
தங்கியே சிலநாள் தருக்கியே யிருந்து
சேரமான் கொடுக்கும் திரவிய மனைத்தும்
பாரமாய் வினைஞர் பற்றியே கொணர

ஆண்டெழுந் தருளி அருதிரு முருகன்
பூண்டியி லடவி புக்கனர் தாமே.

வசனம்.

இப்படியாக, சுந்தரர் திருமுருகன் பூண்டிக்கு மேல்பால் காட்டிலே வருகிறபோது பரமேஸ்வரர் ஏவலினாலே வேடர் வருகிற விதம் எப்படி யென்றால் :—

141.

விருத்தம்.

முருகன்பூண் டியினில் வாழும் முக்கண்ணர் அருளி லேவும்
அருகுறு பூத நாதர் அவர்களும் வேட ராகிக்
கருகுறு கச்சை கட்டிக் கைதனில் வில்லு மேந்தி
இருமையாய் முன்னும் பின்னும் இரைந்துகொண் டேகி னரே.

142.

தரு.

கோரை மீசையுந் தாடியும் குச்சியாய் செம் மட்டை மயிரும்
வீர ராகி வளைதடிகை வேட்டைக் காரர் வந்தனர் ஐயா !
கடிய சொல்லும் இடிமுழக்கும் கையில் வில்லும் அம்புங் கொண்டு
மிடி யில்லாமல் தழை புனைந்து வேட்டைக் காரர் வந்தா ரையா !

வசனம்.

இப்படியாக வந்து பறிச்சப் போகிற விதம் எப்படி யென்றால் ;—

143.

தரு.

போடு போடு வளைதடி போடு போடடா—சற்றுப்
பொறு பொறு சுமையெல்லாம்
பறியடா பறியடா பறியடா—கடுகத்
துணியெலாம் பறியடா—இவர்கள்

கூவென்றுமே அடியடா—சளசள என்றுமே
 கூச வேண்டாம் இவர்களைச் சோதிச்சடா—
மெள்ள மெள்ள மூட்டையை எடு எடடா—ஒன்றும்
 விடவேண்டாம் கொள்ளை யிடடா.

வசனம்.

இப்படியாகப் பறிக்கிறபோது சுமைகள் கொண்டு வந்த ஆள்கள் கூச்ச விடுகிற விதம் எப்படி யென்றால் :—

144.

தரு.

அடியா தடித்தனர் குத்தாது குத்தினர்—
 ஐயகோ—வேடர்கள் எங்களைச்
செடியா லொருவரை யாய் கட்டினர்—எங்கள்
 சுமையெல்லாங் கொள்ளை கொண்டு போனார்
 அபயம் அபயம் ஐயா !

உடுத்த துகிலும் உரித்தனரே—உயிர்
 உண்டில்லை என்னவும் பார்த்தனர்—வந்தோம்
அடுத்த திதுவார்த்தை விண்ணப்பஞ் செய்தோம்
 ஆரூரில் சுந்தர சுவாமி யாரே.
 அபயம் அபயம் ஐயா !

வசனம்.

இப்படியாகச் சொன்னது கேட்டுத் திருமுருகன் பூண்டியில் வந்து சுவாமியுடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

145.

குறுந்தாழிசை.

திருமுருகன் பூண்டியில்வாழ் சிவசிவா வுமக்கபயம் !
அருகிடமே உடைமை யெல்லாம் ஐயகோ பறிகொடுத்தோம்!

சேரமான் கழறிதந்த திரவியநி க்ஷேபமெல்லாம்
சேரவே அங்கங்கே திரண்டொன்றாய்ப் போச்சுதையா !

முத்தனையாள் என்பரவை முத்துமுகந் தனக்கேற்ற
முத்துமூக் குத்தியொன்று மூந்நூறு பொன் பெறுமே !

சித்திரப்பொற் சேலைகளும் செம்பவள மாலைகளும்
சத்திர சா மரைகளுமே தனித்தனிஆ யிரம்பெறுமே !

எத்தனையோ குண்டலங்கள் எத்தனையோ பொற்பதக்கம்
எத்தனையோ மோதிரங்கள் இவையெல்லாம் பறிபோச்சே !

இத்தனையும் போச்சென்று எங்களைத்தான் விட்டிடாமல்
சாத்தினார்காண் வளைதடியால் தத்தளிக்கு தென்மனங்காண்!

ஏதுநான் செய்வேனையா இனிப்பரவைக் கென்னசொல்வேன் !
நீதயவு செயாதிருந்தால் நின்னைவிடுத் தேகேனே !

வசனம்.

இப்படியாகச் சந்நிதியிலே நின்று சிறிது வசனங்கள் சொல்லித் திரும்புகிறபோது போன வுடைமை யெல்லாம் மலைபோலே குவித்திருக்கிறதைக் கண்டு ஆள்கள் கையிலே எடுப்பித்துக் கொண்டு திருவாரூருக்குப் போகிற விதம் எப்படி யென்றால் :—

146.

விருத்தம்.

பரமனார் கருணை போற்றிப் பரிசனம் பலருஞ் சூழத்
தரமதாய்த் திருவா ரூரில் தலத்துளார் எதிர்கொண் டேத்தத்
திரமதாய்த் தியாக ராயர் திருவடி தொழுது பாடி
விரைவினில் பரவை யார்தம் வீட்டினி லெய்தி னாரே.

வசனம்.

இப்படியாகப் பின்னையும் சிலநாள் பரவையாருடனே கூடியிருந்து சுவாமியைச் சேவித்துக் கொண்டிருக்கிற நாளிலே மலையாளத்துக்குப் போகிற விதம் எப்படி என்றால் :—

147.

திபதை.

சேரமான் பரிவும் சிந்தையி லன்பும்
ஓருயி ரெனவே யுகந்ததோ ழமையும்
தயவுமிங் கிதமும் சாந்தநற் குணமும்
நயமுநல் லுறவும் நண்புமா தரவும்
நேசமும் நெறியும் நீதியுஞ் சிவனார்
பூசையும் பத்தியும் போதமுங் கொடையும்
நெஞ்சிலெப் பொழுதும் நினைந்துள முருகி
தஞ்சமா மலையுஞ் சாரவே கருதி
கங்கை வேணியனார் கருணையும் நினைந்து
தங்கிவாழ் ஆரூர்த் தலத்தினின் றேகிப்
பரிவினு லுகந்து பரிசனஞ் சூழ
அரியபுக் கொளியூர் அவிநாசி மேவி
முதலைமுன் விழுங்கும் மூவிரு வயது
மதலையை மீள வரச்செய்து கொடுத்து
கொங்குநா டகன்று குடகுகோ ளத்தில்
எங்கள்சே ரலர்கோன் எதிர்கொள எய்தி
ஒருவருக் கொருவர் உவப்பினுல் வணங்கி
இருவருக் கரிய இறையருள் பரவி
அஞ்சையங் களத்தில் வந்துசுந் தரனார்
தஞ்சமாய்ச் சிவனார் சரண்பணிந் தனரே.

வசனம்.

இப்படியாகத் திருவஞ்சைக் களத்து சுவாமியைப் பணிந்து பரவி யிப்படி சுந்தர ரிருக்கிறபோது கயிலாசத்திலிருந்து வெள்ளை யானை வருகிற விதம் எப்படி யென்றால் :—

148.

விருத்தம்.

சுந்தரன் தன்னை முன்னே தொண்டனுக் கிசைக்க வேண்டி
சிந்தையிற் கருதி யாதி சிவபிரான் கணங்கள் தம்மை
இந்திரன் தன்னை வானி லிமையவர் தம்மைக் கூட்டி
அந்தவெண் கயிலை நேர்வெள் ளானையை அனுப்பி னாரே.

149.

தரு.

வெள்ளானை வருகிற வேடிக்கை பாரீர்!
கள்ளூ லாவு மலர்க் கொன்றைக் கண்ணி வேணி சூல பாணி
வள்ள லானோர் வருவதற்கு வாவிடுத்த (வெள்ளானை)
வெள்ளிமலை தனிலிருந்து எதிர்கொண் டெடுத்துப் போக
(வெள்ளானை)

வசனம்.

அந்த சமையத்திலே கணநாதர் சுந்தரருடனே சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :—

150.

தரு.

புவனமெல்லாம் போற்றிசெய்யும் புநிதனார் தோழர் கேளீர்
தவமிருந்த சிவகணங்கள் எல்லாரும் தலைமை செய்ய
அவனிவிடுத் தம்புயச்சே வடிநிழற்கீழ் வருகவென்றே
சிவபெருமான் அருளிப்பாடு செய்தனர்நீர் வருவீரே.

வசனம்.

இப்படிச் சிவகணங்கள் சொன்னபோது சுந்தரர் முக்கால் வலம்வந்து சேவித்து வெள்ளானை மீதி லேறிக்கொண்டு கேசரி மார்க்கமாய்ப் போகிறபோது சொல்லுகிற வசனம் எப்படி யென்றால் :

151.

விருத்தம்.

ஒருயி ராகி யொன்றும் ஒருபன தாகி யெந்தன்
ஆருயிர்த் தோழ னாகி அடிகளு மாகு மெங்கள்
சீருயிர்ச் சேர மான்கைத் திருவிடை வாங்கி டாமல்
சாருதல் கொடிய நெஞ்சே தகுமதோ சாற்று வாயே.

வசனம்.

இப்படியாக கேசரி மார்க்கத்திலே போகிறபோது சுந்தரர் சொன்ன வசனத்தைக் கொடுங்கோ ளூரிலே எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கச்சே சேரமான் அறிந்துகொண்டு எண்ணெய்த் தலையுடனே குதிரை யேறிக்கொண்டு வருகிற விதம் எப்படி யென்றால் :—

152.

தரு.

வருகிறான் சேரமான் பாரீர் !—குதிரைமேல்
வருகிறான் சேரமான் பாரீர் !
வருகவே—இன்பந் தருகவே—சிந்தை யுருகவே
மகிழ்வு பெருகவே—மேவி (வரு)
வண்ணத் தலைவர்கள் எண்ணத் தலைமையின்
திண்ணத்த சேரமான் எண்ணெய்த் தலையுடன் (வரு)
மண்டலம் யாவையும் விண்டலம் யாவையும்
கண்டுகொண் டாடவே செண்டுகொண் டாடியே. (வரு)

வசனம்.

இப்படியாக வையாளி யிட்டுக்கொண்டு நிமிஷத்திலே திருவஞ்சைக் களத்துக்கு வந்து சேரமான் பெருமாள் கேசரி மார்க்கத்திலே போகிற வெள்ளானையைப் பார்த்து குதிரை வலச் செவியில் பஞ்சாக்ஷரத்தை உபதேசம் பண்ணி ஆகாச மார்க்கப்

பண்ணுவித்து வெள்ளானையைப் பிரதக்ஷிணமாய் வந்து முன்னே நின்று சேவித்தபோது சுந்தரர் சொல்லுகிற வசனம் எப்படியென்றால் :—

153.

விருத்தம்.

என்னு ருயிர்போல் வந்த தோழா
இங்குன் பெருமை யென் சொல்வேன்
நின்னுண் மையும் நின் னறிவினையும்
நிகழ்த்த ஒருவர்க் கரிதையா !
மின்னார் சடையார் வடகயிலை
மேவக் கருதி மனந்தன்னில்
உன்னு முனமே வந்து நின்றாய்
உனக்கு நிகரோ ஒருவருமே!

வசனம்.

அந்த சமையத்திலே சேரமான் சொல்லுகிற வசனம் எப்படியென்றால் :—

154.

விருத்தம்.

எல்லாம் உனது திருவருளே ஈசன் வேறு நீ வேறோ
சொல்லாய் சிலையாய் மலைவளைத்த சுரர் நாயகனைத் துதிவிட
வல்லாய்! பரம கதிக்கேகு மார்க்கந் தனிலு மறவாமல்
சல்லா பமதாய் நீ நினைக்கத் தவமென் செய்தேன் தமியேனே.

155.

திபதை.

இத்திற மவர்கள் இருவரு மொழிந்து
மைத்திறை களத்தார் மலரடி நினைந்து

தெக்கண மதனில் தினகர னெழுந்து
தொக்க வேகுதல்போற் சுடரொளி விளங்க
சுந்தரர் தவளத் தும்பிமேல் வருக
அந்தர நெறியில் அவர் பின்னே தொடர்ந்து
தேசவாம் பரிமேல் சேரமான் வருக
வீசுபூங் கயிலை வெற்பினை யெய்தி
திங்கள்வே ணியனார் திருவருள் புரியத்
தங்களை யெவர்க்கும் தலைமைசெய் திருக்கச்
சங்கரி யருளாற் சங்கிலி பரவை
நங்கையும் அவர்பால் நணுகினர் தாமே.

156.

விருத்தம்.

நத்தியே நடிப்பவர் நடித்தல் காண்பவர்
முற்றுமே படிப்பவர் முழுதுங் கேட்பவர்
மற்றுமிக் கதைதனை வரைந்து கொள்பவர்
கற்றையஞ் சடையவர் கயிலை சேர்வரே.

157.

நாட்டைராகம்.

வாழி திங்கள் மும் மாரி பெய்ந்திட
வாழி வையகம் அனைத்தும் ஓங்கிட
வாழி சைவமும் நீறும் வீறிட
வாழி யம்பிகை வாழ வந்தவள்
வாழி சத்திய வாசகர் வாழி.

158.

மங்களம்.

மங்களமே—ஜெய—மங்களமே

(1) கறையணி கண்டருக்கும் கலியுக நாயருக்கும்
பிறையணி நாதருக்கும் பிஞ்ஞகர்க்கும் (மங்களமே)

(2) தாவு வெள் விடையருக்கும் சந்திர சேகரர்க்கும்
மாவையில் சத்திய வாசகர்க்கும் (மங்களமே)

(3) கன்னியார் அர்ச்சிக்கும் கற்பக வல்லிக்கும்
நண்ணுதவ சௌபாக்கிய நாயகிக்கும்
மங்களமே—ஜெய—மங்களமே.

திருச்சிற்றம்பலம்.

அநுபந்தம்.

நூலாராய்ச்சி

[எண்கள் செய்யுளின் எண்கள்]

I. நூலில்வரும் பழமொழிகள்.

1. அழுத பிள்ளை பால் பெறும் ... 40
2. ஆயிரம் பொய் சொல்லி ஒரு ஆயிழையை மணம் புணர்தல் நியாயம் ... 99
3. இரண்டு பெண்டுள்ளவர் மனதிலே நெருப்பு ... 104
4. இருந்தல்லோ படுக்கவேணும் ... 83
5. எழுதி வழக்கில்லை ... 40
6. கூடாது கொக்கு பிடிக்கின்ற மந்திரம் ... 23-(8)
7. கையிற் புண்ணுக்குக் கண்ணாடி வேணுமோ ... 23-(1)
8. கோணக்கழி வெட்டுகின்றாய் ... 23-(3)
9. சில்லித் தோண்டிக்குள் ஆயிரஞ் சாலொடு தண்ணீரைச் சொரிந்தாலும் நிற்குமோ ... 23-(2)
10. நீலி யிட்ட நிந்தை ... 43-(2)
11. பேச்சினால் பந்தலிட வேண்டாம் ... 23-(7)
12. வளர்த்த கடா வந்து பாய லாச்சுது ... 23-(5)
13. வாய்க்கினி முத்திரை போடவேண்டா ... 23-(4)

II. சொற் சாதுரியங்கள்.

1. செய்யுள் ... 11
2. கங்கணம் அறுக்கத் தானே கங்கணம் கட்டி வந்த 32
3. அந்தகற் கந்தகரிடத்திற் பிழை செய் தந்தகனானேன் ... 100

III.

நூலில் வரும் சாதாரணமாய் வழங்குஞ் சொற்கள்.

அந்தரங்கப் பேச்சு	90	சாணுக்கத்தி	137
ஆகட்டும்	26-(4)	சிணுக்கு	22 (8)
ஊணு கோல்	99	தத்தளிக்குது மனம்	145
ஏராளம்	58	தாலி	43 (2,
களரி	37	தொன்னைக்காது	6
காயக்கப் பேச்சு	23-(1)	நாக்கும் வாயும் முட்டை போல உலர்ந்தது	121
குண்ணு	54,61	பனி முடங் கலான பின்பு	114
குலுக்காட்டம்	79	மமதை	20 (3)
குல்லா	6,8,138	முஸ்தாச்கது	8—வசனம்.
கோரை மீசை	142		
சதுரி	87		

Tirupati Sri Mahant's Press, Madras.